விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 02 வியாழக்கிழமை (18.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 211

# சமாதான முனைப்புகள் இலங்கையில் தாமதம்

## ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் இனங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் போதாது என ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.**

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட பிரதிநிதியும் இந்திய - இலங்கைக்கான ஆஸ்திரிய நாட்டின் பிரதித்தூதுவருமான ரைமூன் மாயிஸ்யாழ்.ஆயர்தோமஸ்சௌந்தரநாயகம் ஆண்டகையுடனான சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவத்துள்ளார். இந்தச் சந்திப்பு நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ். ஆயர் இல்லத்தில் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக யாழ். ஆயர் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில், இலங்கையில் இடம் (19ஆம் பக்கம் பார்க்க)



## வீரவன்சவிற்கு சுரணை இருந்திருந்தால் அரசியலிலிருந்து விலகியிருக்க வேண்டும்

### விமலின் கூச்சலுக்கு மனோ காட்டம்



(கொழும்பு)

ஆடை அணிந்து வாழும்சுரணை உள்ளவர் என்றால் விமல் வீரவன்ச இந்நேரத்துக்குள் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு அரசாங்கத்தை விட்டு வெளியேறி இருக்க வேண்டும்.

முதலில் இலங்கை பற்றிய விசாரணைக்குழுவைஐ.நா. சபை கலைக்க வேண்டும் என்று விமல் வீரவன்ச சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

ஆனால் ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கி மூன் இந்த கோமாளியை கணக்கில்கூட எடுக்கவில்லை. இவரும் உண்ணாவிரத்தில் சாக வில்லை. பிறகு பொலிஸ், காணி அதிகாரங்களை அகற்றாமல் வடக்கில் தேர்தலுக்கு அரசு செல்லக்கூடாது. அப்படி சென்றால் அரசில் இருந்து அகன்று விடுவேன் என்று சொன்னார். சிவசங்கர் மேனன் வந்து சொல்ல வேண்டியதை சொன்னவுடன் அரசு தலை வணங்கி 13-ம் திருத்தத்தில் கை வைக்காமல் பொலிஸ், காணி அதிகாரங்களுடன் வடக்கு தேர்தலுக்கு செல்கின்றது. ஆனால் வீரவன்ச அரசில் இருந்து விலக வில்லை.

இப்போது வடக்கு தேர்தலுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்கள் கூடாது என புதிய கூச்சலை எழுப்புகின்றார் இந்த கோமாளி. இந்த கோரிக்கையை இவரது அரசு ஏற்காவிட்டால் (19ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆம் திருத்தம் தொடர்பில் அரசு அடக்கி வாசிப்பதற்கு இந்தியாவே காரணம்!–விஜித

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13-வது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக அரசாங்கம் தற்போது அடக்கி வாசிப்பதற்கு இந்தியாவே காரணம் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கு கடந்த வாரம் விஜயம் செய்திருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் செய்தி ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார்.

இச்செய்தியில் 13வது திருத்தச்சட்டத்தை பலவீனப்படுத்தவோ அல்லது ஒழிக்கவோ அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டால், சர்வதேச அரங்கில் அரசாங்கம்எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் போது இநதியா ஆதரவுவழங்காது என்று மன்மோகன் சிங் எச்சரித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக இந்தியா உள்ள நிலையில், தனது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஆட்சியை நடத்த அரசாங்கத்தின் மீது இந்தியத் தரப்பில் அழுத்தங்கள் கொடுக் (20ஆம் பக்கம் பார்க்க)

## ராஜபக்ஷ ஆட்சிக்கு முடிவு நெருங்கி விட்டது – சிறிதுங்க

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் கடும்போக்கு ஆட்சியை கலைத்து ராஜபக்ஷ ரெஜிமென்டை வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கி வந்துவிட்டதென முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற செய்தி யாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாட்டு மக்கள் பட்டினியில் வாடுகின்ற நிலையில் அரசாங்கம் நாடு முழு (19ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் வாகன விபத்து; இரு இராணுவ வீரர்கள் பலி

### நால்வர் காயம்

(குருமன்காடு)

யாழ்ப்பாணம் - கண்டி ஏ9 வீதியின் வவுனியா - நவகமுவ பிரதேசதில் இராணுவ கெப்ரக வாகனமொன்று நேற்றுமுன்தினமிரவு விபத்துக்குள்ளானதில் இரு இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நான்கு வீரர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த மேற்படி வாகனம், வீதிக்கு குறுக்காக பயணித்துக் கொண்டிருந்த பிரதேசவாசி ஒருவா மீது மோதிவிடாமல் வீதியோரமாக நிறுத்திவிட்டு மீண்டும் பயணிக்க ஆரம்பிக்கும் தருவாயில், வேகக் கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்துச் சம்பவித்துள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் பொலிஸாரிடம தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான வாகனம், கிளிநொச்சி பாதுகாப்புப் படைத்தலைமையகத்தைச் சேர்ந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில், கிளிநொச்சி படைத் தலைமையகத்தின் 24-ம் கெமுனு படைப்பிரிவைச் சேர்ந்த கேணசேகர (வயது -29) மற்றும் அதே படைத் தலைமையகத்தைச் சேர்ந்த 20-வது கஜபா (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தெரிவு இன்று

## கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய வேட்பாளர் தெரிவு நேற்றைய தினம் இடம்பெறவில்லை.

ஆசனப்பங்கீடு மற்றும்அது தொடர்பான கருத்துக்களே இச்சந்திப்பில் இடம் பெற்றுள்ளது.

நேற்றைய கலந்துரையாடலின் தொடர்ச்சியான சந்திப்பு இன்றைய தினமும் இடம் பெறவுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இன்னும் ஒரு சில நாட்களுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற சந்திப்பில் வடக்கு மாகாணத்திலுள்ள உள்ள5 மாவட்டங்களிலும் சரியான முறையில் வேட்பாளர்களினை எவ்வாறு தெரிவு செய்வது?

ஆண்,பெண் பிரதிநிதித்துவம் என்பனவும் ஒவ்வொரு கட்சிக்குள்ளும் எவ்வாறு வேட்பாளர்களினை பகிர்ந்து கொள்வது தொடர்பிலும் நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டன.

கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கு முஸ்லிம்களும் விண்ணப்பித்துள்ளதனால் அது தொடர்பிலான பரிசீலனையும் மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவஞானம் சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன் உட்பட சிவசக்தி ஆனந்தன், புளொட் சார்பில் பவன் என்போர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் இச்சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி இந்தியாவில் உள்ளதனால் கலந்து கொள்ளவில்லை யெனவும் இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடலில் கலந்து கொள்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-4)

# போலி நாணயத் தாள் குற்றச்சாட்டு கைதான மூவருக்கும் பிணை அனுமதி

(யாழ்ப்பாணம்)

500 ரூபாய் போலி நாணயத்தாள் கொடுத்து எரிபொருள் நிரப்ப முயன்ற குற்றச்சாட்டில் கைதாகிய மூவரினையும் யாழ்.நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ்.நகரில் பணிபுரியும் வங்கி ஊழியர்கள் இருவர் உட்பட மூவர் யாழ்.நகரில் அமைந்துள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் போலி நாணயத் தாளினைக் கொடுத்து தமது மோட்டார் சைக்கிளிற்கு பெற் றோல் நிரப்ப முயன்று உள்ளனர்.

எனினும் பெற்றோல் நிரப்பு நிலையத்தில் கடமையாற்றிய ஊழியர் அவர்கள் வழங்கிய நாணயத்தாள்கள் போலியானவை என்பதனை இனங்கண்ட பின்னர் அவர்களோடு முரண்பட்டு பொலிஸாரையும் சம்பவ இடத்திற்கு அழைத்துள்ளார்.

உடனடியாக அங்கு வந்த பொலிஸார் மூவரினையும் கைது செய்து யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் அம் மூவரும் யாழ்.நீதிவான் பெ. சிவகுமார்முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது மூவரின் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி மூவரையும் விடுவிக்க கோரி பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

பிணை விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த நீதவான் மூவரினையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுப்பான மூன்று ஆட்பிணையில் செல்ல அனுமதித்துள்ளார். (செ-4)

# சுரேஸ் எம்.பியின் வாகனம் விபத்து; இருவர் காயம்

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் வல்லை செல்வச் சந்நிதி ஆலய வீதியருகே இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, யாழ்ப்பாணத்தில் இருந்து வல்லை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஹயஸ் வாகனமும் வல்லையில் இருந்து சந்திக்கு சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் புலோலி மேற்கு கருகம்பனை சேர்ந்த அருளானந்தன் விமலநாதன்(வயது 24), கிட்டுணப்பிள்ளை கிருசாந்தன்(வய்து 29) என்ற இருவருமே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ் விபத்தில் சுரேஸ் பிரேமச்சந்திரன் எவ்வித காயங்கள் இன்றி நலமாகி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-24)

# இறை இசை விருந்து

வட பிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனம் வழங்கும் இறை இசை விருந்து நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (செ)

465,000 (நாலு இலட்சத்து அறுபத்தையாயிரம்) மட்டும் செலவிட்டு,
**பல இலட்சங்களைச் சம்பாதிக்கும் வாய்ப்புக்கள்!**

UK, Australia, New Zealand, Singapore, Malaysia, China என விரும்பிய நாட்டில்
**3 ஸ்டார் 5 ஸ்டார் ஹொட்டேல்களில் கௌரவமான தொழில்**

உலகின் முன்னணி கப்பல் நிறுவனங்களுடன் இணைந்து, உலகம் முழுவதும் சுற்றியபடி இலட்சக் கணக்கில் சம்பாதிக்கும் கப்பல் வேலைவாய்ப்புக்கள்

**விளக்கக் கருத்தரங்கு & உடனடி அனுமதி**

காலம்: 20.07.2013 சனிக்கிழமை காலை 9 மணி
இடம் : சிகரம் விரிவுரை மண்டபம்
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(C-4037)

முற்பதிவுகளுக்கு
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798

**பிள்ளையார் இன்**

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-4030)

**DMI International Pvt (Ltd)**

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் D.M.I அமெரிக்க நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை.

Distributor, Supervisor, Ass.Manager administration

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களிலிருந்து O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள் தேவைப் படுகின்றனர்.

- ✔ 4 மாத கால பயிற்சி வழங்கப்படும்
- ✔ பயிற்சியின்போது கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
- ✔ பயிற்சி முடிவின்போது 30,000-50,000 பெறமுடியும்.
- ✔ பயிற்சியை முடித்த பின் வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டு.

குறிப்பு : தங்குமிட வசதி இலவசம்,
வயதெல்லை 18 - 35

தொடர்புகளுக்கு:
021 720 1521,
0777009820,
0778920777 (C-4035)



**தொடர்ந்தும் மேலதிக சேவையில்...**

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் (24 மணித்தியாலயம்) உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

குறிப்பு: விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No.:-021 222 5392 (C-4028)

# சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு ஆஸ்திரியா உதவத் தயார்

## அந்நாட்டு பிரதி தூதுவர் அரச அதிபரிடம் தெரிவிப்பு

யாழ்.மாவட்ட சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய ஆஸ்திரியா தயாராகவுள்ளதாக அந்நாட்டு பிரதித் தூதுவர் தன்னிடம் தெரிவித்ததாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த இந்தியா- இலங்கைக்கான ஆஸ்திரிய நாட்டின் பிரதித் தூதுவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட பிரதிநிதியுமான ரைமூன் மாயிஸ்; யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் பலரை சந்தித்து கலந்துரையாடியதோடு அரியாலை நாவலடிப்பகுதியிலுள்ள இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளையும் சென்று பார்வையிட்டார்.

இதன் தொடர்ச்சியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை பிற்பகல் 2 மணியளவில் மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய பிர[illegible] [illegible]வாறு தெரிவித்ததாகவும் அதுமட்டுமன்றி யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பழ வகைகளுக்கு வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுத் தரநடவடிக் கை எடுப்பதாகவும் ஆஸ்திரிய நாட்டுப் பிரதிநிதி உறுதியளித்தாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (செ-6)

**கண்ணீர் அஞ்சலி**



அன்னை மடியில் 31.05.1961
ஆண்டவன் அடியில் 17.07.2013

அமரர்
**இராசையா உதயமனோகரன்**

அன்பால் எம் அனைவரையும் அரவணைத்த
அணையாத் தீபமே! எமை வழிகாட்டிய தெய்வமே!
நீண்ட துயரில் எமை நீங்காமல் ஆக்கிவிட்டு
உலகை விட்டு கடவுளிடம் சென்றீரோ!
மீண்டுவர மாட்டீரோ இம் மேதினிக்கு!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சி. லிங்கேஸ்வரன் குடும்பத்தினர்
கோட்டைக்காடு (மல்லாகம்)

[C-4036]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### நன்றி

ஒரு ஊரிலே குரு இருந்தார். அவர் ஒருநாள் இரவு ஒரு முக்கியமான புத்தகத்தைக் கையிலே வைத்து படித்துக் கொண்டிருந்தார்.

அவர் படித்துக் கொண்டிருந்தது ஒரு ஞானநூல். அதிலே ஆழ்ந்து போய் இருந்தார் அந்தக் குரு.

அந்த நேரம் ஒரு திருடன் கையிலே கத்தியுடன் மெதுவாக உள்ளே நுழைந்தான். அந்தக் குருவின் அருகில் மெதுவாகப் போய் மிரட்டினான்.

''சத்தம் போடாதே! மரியாதையாக உன்னிடமுள்ள பணத்தைக் கொடு... இல்லையென்றால் கொன்று விடுவேன்... பணத்தைக் கொடுக்கிறாயா... இல்லையேல் ஒரு குத்தாக குத்தட்டுமா...?" என்று மிரட்டினான்.

அந்தப் பெரியவர் நிமிர்ந்து பார்த்தார்.

"இதோ பாரப்பா... என்னைத் தொந்தரவு செய்யாதே! கொலை அச்சுறுத்தல் விடுக்காதே! அதோ பார்... அந்த மேசை மேலேதான் பணம் உள்ளது. எடுத்துக் கொள்" என்று கூறிவிட்டு மறுபடியும் படிக்க ஆரம்பித்தார்.

திருடனும் மேசையை நோக்கி நகர்ந்தான்.

இவ்வேளை பெரியவர் தலை நிமிராமல் புத்தகத்தை பார்த்துக் கொண்டு சொன்னார்; ''எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். சிறிதளவு மிச்சம் இருக்கட்டும்... நாளைக்கு வரி கட்ட வேண்டியிருக்கிறது'' என்றார்.

இவருடைய நிதானம், பதற்றமின்மை, அமைதி இவற்றையெல்லாம் பார்த்த திருடன் அசந்து போனான்.

இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவர் கூறியவாறே சிறிதளவு பணத்தை வைத்து வீட்டு மிகுதியாக இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வாசலைத் தாண்டும்போது அந்தப் பெரியவர் சொன்னார்;

"எதை யார் கொடுத்தாலும் நன்றி சொல்ல வேண்டும்... அதுதான் நாகரிகம்?" என்றார்.

திருடன் திகைப்புடன் திரும்பிப் பார்த்தான். ''நன்றி'' என்று சொல்லிவிட்டு அவன் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

நாட்கள் சென்றன. அந்தத் திருடன் ஒருநாள் பொலிஸாரி டம் மாட்டிக் கொண்டான். பொலிஸார் அவனை விசாரணைக்குட்படுத்தினர். இதன்போது பெரியவர் ஒருவரின் வீட்டிலே திருடியதை அவன் ஒத்துக் கொண்டான்.

அந்தப் பெரியவரை சாட்சி சொல்ல பொலிஸார் அழைத்தனர். அதற்கு அவர் சொன்னார்; ''என்னைப் பொறுத்த வரைக்கும் இவன் திருடன் இல்லை; அவனுக்கு ஏதோ பணக்கஷ்டம் ஏற்பட்டது. அதனாலே அவன் என்னிடம் வந்தான்; நான் கொடுத்தேன்- ''நன்றி'' கூறி விட்டு போனான்... என்னப்பா "நன்றி" கூறினீயா இல்லையா? என்றார்.

''ஆமாம் சுவாமி... சொன்னேன்'' என்றான் திருடன் ஆச்சரியத்துடன்...

வேறு குற்றத்திற்காக அவன் சிறைக்குப் போனான்; சிறிது நாட்கள் சென்றபின் வெளியிலே வந்தான்.

வந்தபின் நேராக அந்தப் பெரியவரிடம் சென்றான்; ''குருவே என்னை சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்.

அதன்பின்னர் அவன் பெரியவரின் சீடனானான்.

அந்தக் காலத்திலே இப்படி நல்லவர்களுடைய நடவடிக்கைகளே கெட்டவர்களை திருத்தியது. இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் நடக்குமா?

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்றுமுதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை குறித்த தினங்களில் குறிப்பிட்ட பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன்படி இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணி வரை அரியாலை சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி முதல் 1.30 மணிவரை அரியாலை மிருக வைத்தியசாலை நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றுதல் நடைபெறவுள்ளது.

மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணிவரை அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11 .30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை அரியாலை காந்தி சனசமூக நிலையத்திலும் நாய்களுக்கு விலங்கு விசர் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரை அருணோதயா சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணியிலிருந்து 1.30 மணி வரை அரியாலை திருமகள் சனசமூக நிலையத்திலும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரை நாயன்மார் கட்டு பாரதி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை நாயன்மார்கட்டு அம்பாள் சனசமூக நிலையத்திலும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவ்ரை அரியாலை சுஜா போட்டோ நிலையத்தின் முன்பாகவும் முற்பகல் 11.30 மணிமுதல் 1.30 மணி வரை அரியாலை கனகரட்ணம் மகாவித்தியாலயத்தின் முன்பாகவும் நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரையும் அரியாலை கலைவாணி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை ஆள்காட்டி வீதி அருளம்பலம் வீதி சந்தியிலும் 30 ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரை நிறை பார்க்கும் மையத்திலும் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை ஆசீர்வாதப்பர் வீதி பெரிய பாலத்திலும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்குபாண்டியன்தாழ்வு வைரவர் கோவிலிலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரையும் கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முற்பகல் 9 மணிமுதல் 11மணி வரை அரியாலை முள்ளி வீதியிலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை இலங்கை பெண்ரிக் கோஸ் சபை வீதியிலும் 2 ஆம் திகதி முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரையும் இலந்தைக் குளம் வீதி அம்மன் கோவிலிலும் தடுப்பூசி ஏற்றும் பணி நடைபெறவுள்ளது. (அ-5)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் நுணசை வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் மாதகல் நுணசை வித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்க நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ-5-23)

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

(யாழ்ப்பாணம்)

கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டமும் புதிய செயற்குழுத் தெரிவும் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது என பேரவையின் செயலாளர் அ.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (அ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 120 |
| தக்காளி | 120 | 150 | 140 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 40 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 100 | 100 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 180-220 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 60 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | — | 120 |
| பயற்றங்காய் | 50 | 60 | 80 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 100 | 70 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 260 | 200 |
| போஞ்சி | 120 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 15-20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 120 |

## இராசி பலன்

18.07.2013
(ஆடி 02, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
தசமி பிற்பகல் 12.27 மணிவரை
விசாகம் பிற்பகல் 3.33 மணிவரை
இராகுகாலம் 1.30-3.00 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை

**மேடம்** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்பும் இடம்பெறலாம், தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**இடபம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கேட்ட உதவிகள் தேடிவந்து சேரலாம், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், ஆரோக்கியம் சீராகும், கடன் பிரச்சினைகளை சுமுகமாகச் சமாளிப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், கல்வி முன்னேற்றம் கருதி ஒரு தொகையைச் செலவு செய்வீர்கள்.

**சிங்கம்** பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் சிறப்பாக இருக்கும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், செய் தொழி லில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**கன்னி** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

**துலாம்** வருமானத்தை அதிகரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், சில விவாதங்கள் ஏற்பட இடமுண்டு.

**விருச்சிகம்** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், விரும்பிய காரியம் விரும்பிய படியே நடைபெறும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரியோர் சந்திப்புண்டு.

**தனுசு** ஊர் மாற்றம், இடமாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்** மறக்க முடியாத இனிய சம்பவ மொன்று நடைபெறலாம், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**கும்பம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், எதிர்கால நலன்கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள்.

**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், உறவினர்களை உபசரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி புனரமைப்பு பணிகளில் பொறுப்புணர்வு வேண்டும்

## மக்கள் சுட்டிக்காட்டு


பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி வரை வீதி அகலிப்புப் பணியில் ஈடுபடும் ஒப்பந்தக் காரர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் வீதியால் செல்லும் பயணிகள் அடிக்கடி சிறு சிறு விபத்துகளுக்கு உள்ளாவதுடன் பெரும் அசௌகரியங்களையும்எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது. மேற்படி பிரதான வீதி அகலிப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்கள் வீதி அகலிப்பு என்ற பெயரில் பயணிகளுக்கு பெரும் இடையூறு விளைவித்து வருகின்றனர்.

இதில் வீதிகளில் சல்லிக் கற்களைப் பறிப்பதால், வீதி எங்கும் அவை பரவிக்கிடக்கின்றன. இதனால் அவ்வீதியால் செல்லும் பயணிகள் அடிக்கடி விபத்துக்குள்ளாவதோடுஅதன் மூலம் சிறுசிறு காயங்களும் ஏற்படுகின்றன.

அத்துடன் வீதிகளில் வெற்று பரல்களை பாது காப்பற்ற முறையில் விட்டுச் செல்கின்றனர்.

இது போன்று மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பணியாளர்கள் நடந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

எனவே இவ் வீதி அகலமாக்கும் ஒப்பந்தக் காரர்கள் அவ் வீதியை மிக விரைவில் மக்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் புனரமைக்கும் பணியில் ஈடுபட வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-24)




நன்றி:-மிரர்

# தமிழர்கள் சம உரிமையுடன் சுதந்திரமாக வாழவேண்டும்

## ஆஸ்திரிய தூதுவரிடம் ஆயர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

**இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையினத்தவர்களை சந்தேகக்கண் கொண்டு நோக்கும் பெரும்பான்மையினர் அவர்களுக்கு எரிச்சல் ஊட்டும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர் என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை குற்றஞ்சாட்டியுள்ளார்.**



யாழ்.மாவட்டத்திற்கு நேற்று வருகைதந்த இந்திய- இலங்கைக்கான ஆஸ்திரிய நாட்டின் பிரதித் தூதுவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட பிரதிநிதியுமான ரைமூன் மாயிஸ் யாழ்.ஆயரை அவர் இல்லத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் யாழ்.ஆயர் ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கையில்,

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் தற்போதைய நிலைவரம் குறித்து அறிந்துகொள்ளும் நோக்குடனேயே ஆஸ்திரிய நாட்டின் பிரதித்தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த அவர் என்னுடன் சந்திப்பினை மேற்கொண்டு பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது இலங்கையில் உள்ள பெரும்பான்மையினத்தவர்களான சிங்களவர்கள் சிறுபான்மையினத்தவர்களான தமிழர்களை தற்பொழுதும் சந்தேகக் கண் கொண்டுதான் பார்க்கின்றனர்.

யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 4 வருடங்களைக் கடந்துள்ள நிலையிலும்கூட, இவ்வாறான சூழ்நிலை தொடர்கின்றது.

இதுதவிர தமிழ்மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து சிங்களக்குடியேற்றங்கள் இடம்பெறுவதும் பாதுகாப்பினைக் காரணம் காட்டி தமிழ் மக்களுடைய காணிகள் இராணுவத்தினரின் தேவைக்காக அபகரிக்கப்படும் செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் சிறுபான்மையினத்தவர்களான தமிழர்கள் எரிச்சலூட்டப்பட்டு வருகின்றனர்.

மேலும் வடக்கு மாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது வரவேற்கத்தக்க ஒருவிடயம். ஆயினும் இது போதுமானதாகவில்லை. மேலும் பலதேவைகள் இங்குள்ள மக்களுக்குப் பூர்த்தியாக்கப்பட வேண்டியுள்ளன.மேலும் யுத்தத்தை தமிழர்கள் விரும்பவில்லை. ஆனால் யுத்தத்தால் பல அழிவுகளைச் சந்தித்தவர்களும் தமிழர்கள்தான். மீண்டும் ஒரு யுத்தம் இந்த நாட்டில் ஏற்படுவதை அவர்கள் விரும்பவும் மாட்டார்கள். ஏனைய இனங்கள் போன்று தமிழர்களும் சம உரிமையுடனும் சுதந்திரமாகவும் வாழவே விரும்புகின்றனர். ஆதலால் தமிழர்களுக்கும் உரிமைகள் வேண்டும் என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

மேலும் நீண்டகாலத்திற்குப் பின்னர் வடக்கு மக்கள் தங்களது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்படவுள்ளது.வடக்கு மாகாண சபைத்தேர்தல் காணி பொலிஸ் அதிகாரத்துடன் கூடியதாக 13 ஆவது திருத்தச் சட்டத்தில் எந்தவித மாற்றமும் இன்றி நடத்தப்படவேண்டும்.

அதுமட்டுமன்றி வடக்கு மாகாணசபைத் தேர்தலை தமக்கு கிடைத்த நல்ல ஒருசந்தர்ப்பமாகவே தமிழர்கள் கருதுகின்றனர். இத்தேர்தலில் நன்மையுள் ளதா? இல்லையா? என்பது அரசாங்கத்தின் நடவடிக்கையில்தான் தங்கியுள்ளது எனவும் தான் ஆஸ்திரிய நாட்டின் பிரதித் தூதுவரிடம் தெரிவித்ததாக ஆயர் மேலும் கூறினார். (அ-6)








யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் கண்காட்சி நேற்று இடம்பெற்றது. பாடசாலை அதிபர் சு. தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. அருணாகிரிநாதன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் அதிபர் மற்றும் விருந்தினர்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள மாதிரிகளை பார்வையிடுவதையும் கண்காட்சிப் பொருட்களையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்-எஸ். ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். ஜெய்ப்பூர் நிறுவன வளாகத்தில் வைத்திய கலாநிதி திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் திணைக்கள வடமாகாணப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், சிறப்பு விருந்தினராக துணுக்காய் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவின் விசேட நிகழ்வுகளாக மாற்றுவலுவுள்ளோருக்கான சேவைகளை வழங்கி வரும் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், வாழ்வகம், சிவபூமி, யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், ஒளிரும் வாழ்வு மற்றும் நவீல்ட் பாடசாலை போன்ற நிறுவனங்களைச் சேர்ந் தோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(அ-5)

# குழந்தையுடன் பிச்சை எடுத்த பெண் கைதானார்

(யாழ்ப்பாணம்)

யாழ். பேருந்து நிலையத்தில் கைக் குழந்தையுடன் பிச்சையெடுத்ததாக பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள், பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர். யாழ். பேருந்து நிலையத்தில் தனது கைக் குழந்தையை காட்டி பிச்சை எடுத்த பெண்ணை யாழ். பிரதேச செயலக ஊழியர்கள் பிடித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்தே குறித்த பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த பெண்ணைப் போல் கைக்குழந்தைகளை வைத்து யாழ். பேருந்து நிலையத்தில் பல பெண்கள் பிச்சையெடுத்து வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

இது தொடர்பில் தாம் நடவடிக்கை எடுக்க வுள்ளதோடு கைது செய்யப்பட்டுள்ள பெண்ணை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக சிறுவர், பெண்கள், பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

(அ-4)

## அறிவித்தல்

*யாழ்ப்பாணம் அரியாலை, பாரதி வீதி, இலக்கம் 28 என்னு மிடத்தில் வசித்து யாழ்ப்பாணம் அரியாலை, பாரதி வீதி, இலக் கம் 28 என்னுமிடத்தில் மரணமெய்திய இராமப்பிள்ளை சேதுராசா என்பவரின் மரணசாதனமின்றி இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக*

மரணமெய்தியவர்

*சேதுராசா கைம்பெண் சந்திரேஸ்வரி*
*இல.28, பாரதி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

மனுதாரர்

*தத்துவம் 05/2012*

சேதுராசா நிருபரன்
*இல.28, பாரதி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

எதிர்மனுதாரர்

*இவ் வழக்கு மேற்குறித்த மனுதாரரினால் மேற்குறித்த மரணமடைந்தவரின் மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இம் மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் யாராவது ஆட்சேபனை இருப்பின் இந்நீதிமன்றில் 2013 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19 ஆம் திகதி இம்மன்றில் காலை 9 மணிக்கு சமுகமளித்து தெரிவிக்குமாறு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.*

*மன்றின் கட்டளைப்படி*

வரைவு

பதிவாளர்

மனுதாரரின் சட்டத்தரணி

*மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.*


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY

Applications will be received by me up to 16, August, 2013 from suitably qualified candidates for the following post;

1. POST – STENOGRAPHER GR.II (ENGLISH)
(University of Jaffna)

**QUALIFICATIONS :**

I. G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with credit passes in three subjects including English

II. Proficiency in English Stenography with the following minimum speeds;

| | |
|---|---|
| Shorthand | - 80 w.p.m |
| Typing | - 35 w.p.m( Manual Type writer) |
| 55 w.p.m | ( Computer ) |

Notes :

*a) If suitable candidates are not available for recruitment according to the scheme of recruitment,applicants with lesser proficiency than specified, but who have successfully followed a course in English/Sinhala/Tamil stenography (as the case may be) of a recognized institution of which the duration is not less than one year, may be recruited as Trainee English/Sinhala/Tamil Stenographers (as the case may be ), on a fixed salary equivalent to the initial of the salary scale carrying the salary code U-MN 1 (III) per month. They may be placed in Grade.II within three years if they attain the specified proficiency. A Trainee who does not attain the specified proficiency within three years shall be discontinued.*

*b) The trainee period will not be taken into consideration for reckoning the required period for promotions.*

Salary Scale : U-MN 1 (III A) Rs.16070-17x155-18705 p.m
Selection : Test and By Interview
Age Limit : Not more than 45 years
(Note - Age limit is not applicable for applicants in the Government / Departments/ State Corporation and statutory bodies.)

***Statutory Benefits:***

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of " Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna" together with a self- addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favour of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 16.08.2013**

Applications sent on the **specified** form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/Corporations/ Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

***Registrar***
***17.07.2013***

(C-4033)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து(V)
நட்சத்திரம்: அவிட்டம் 1
உயரம்: 6'
கி.பா : 35
தகைமை/தொழில்: **BA**
வெளிவாரி பட்டதாரி
தொ.இ:B2029

பிறப்பு: 1982 இந்து(V)
நட்சத்திரம்: பூராடம் 2
செ 2
தகைமை/தொழில்: **O/L**
கணக்காளர் **(Hotel)**
தொ.இ:B2030

பிறப்பு: 1978 **RC (Pa)**
நட்சத்திரம்: ரேவதி 4
உயரம்: 5' 7"
செ 4
தகைமை/தொழில்: **A/L**
பலசரக்கு கடை (சொந்தம்)
தொ.இ:B2033

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா : 63.5 செ 7
உயரம்: 6'
தகைமை/தொழில்: **BA Hons**
**UK Work permit (company account)**
தொ.இ:B2040

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து(V)
நட்சத்திரம்: புரட்டாதி 4
உயரம்: 5'1"
கி.பா : 28
தகைமை/தொழில்: **A/L**
தொ.இ: G2018

பிறப்பு: 1975 இந்து(V)
நட்சத்திரம்: சுவாதி 4
உயரம்: 5' 4"
கி.பா : 37.5 செ 2
தகைமை/தொழில்:
**B.A (Hons)**
நிகழ்ச்சி திட்டஉதவியாளர்
தொ.இ:G2037

பிறப்பு: 1984 இந்து(KO)
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா : 31.5
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: **B.A** பட்டதாரி
பட்டதாரி பயிலுனர்
தொ.இ:G2038

பிறப்பு: 1979 இந்து(V)
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா : 47 சூ.செ 8
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்: **B.Sc Hons (IT)**
Software Engineer
தொ.இ: G2039

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணை

# விபரங்களை பேரறிவாளனுக்கு வழங்குக

(கொழும்பு)

**இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படு கொலை வழக்கு தொடர்பான விசாரணையை பற்றி அறிந்து கொள்ள மரண தண்டனை விதிக் கப்பட்ட பேரறிவாளனுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு தொடர் பான விவகாரங்களை கையாளும் துறைக்கு தகவல் கமிஷனர் சுஷ்மா சிங் உத்தரவிட்டுள்ளார்.**

இந்தியாவின் முன்னாள் பிரத மர் ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக விசாரணை நடத்த வர்மா கமிஷன்,ஜெயின் கமிஷன் ஆகிய 2 விசாரணை கமிஷன்கள் அமைக் கப்பட்டன.

ராஜீவ் காந்திக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பில் ஏற்பட்ட குறைபாடு, அவரைக் கொல்வதற்காக தீட்டப் பட்ட சதித்திட்டம் உள்ளிட்ட பல அம் சங்களை இவ்விரு கமிஷன்களும் விசாரித்தன.

இந்தப் படுகொலை தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பேரறி வாளன், முருகன், சாந்தன் ஆகி யோருக்கு மரண தண்டனை அளிக் கப்பட்டது. மேல் முறையீட்டு சுப்ரீம் நீதிமன்றும் இந்த தண்டனையை உறுதி செய்து தீர்ப்பளித்தது.

இவர்களின் கருணை மனுக் களை முன்னாள் ஜனாதிபதி பிர தீபா பட்டேல் 2011 ஆம் ஆண்டு தள்ளுபடி செய்தார்.

இந்நிலையில், மரண தண் டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், ஜெயின் மற்றும் வர்மா கமிஷன் நடத்திய விசாரணையின் போது, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், விசாரணை விபரங் கள், அரசு எடுத்த நடவடிக்கை குறிப் புகள் ஆகியவற்றை வழங்க வேண் டும் என்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் மனு செய்தார்.

இந்த ம்னுவைத் தகவல் அறி யும் உரிமையை கமிஷனர், மத்திய உள் துறை அமைச்சகத்துக்கு பரிந் துரை செய்தார்.

பேரறிவாளனின் வாழ்க்கை மற் றும் சுதந்திரம் அடிப்படையிலான இந்த மனுவிற்கு 48 மணி நேர த்தில் பதில் அளிக்க வேண்டிய மத் திய உள்துறை அமைச்சகம், இது தொடர்பான அறிக்கைகள் தங்க ளிடம் இல்லை எனக் கூறி தகவல் அளிக்க மறுத்து விட்டது.

ஜெயின் கமிஷன் விசாரணை யின் சில அறிக்கைகள் மட்டும் தங் களிடம் இருப்பதாகவும், வர்மா கமி ஷன் அறிக்கை தொடர்பான எந்த தகவலும் தங்களிடம் இல்லை என் றும் உள்துறை அமைச்சகம் கை விரித்துவிட்டது.

இந்நிலையில், மேற்படி தகவல் களைத் தரும்படி கேட்டு மத்திய தகவல் கமிஷனர் சுஷ்மா சிங்கிடம் பேரறிவாளன் மீண்டும் மனு செய் தார். இதனையடுத்து, தங்களிடம் இது தொடர்பாக 918 கோப்புகள் இருப்பதாக தேசிய ஆவண காப்ப கம் கூறியது.

இந்நிலையில், இந்த தகவல் களை பேரறிவாளனுக்கு வழங்க லாமா? என்பது தொடர்பாக 2 வாரங் களுக்குள் பதில் அளிக்குமாறு தகவ லறியும் உரிமை சட்ட மேல்முறை யீட்டு ஆணையத்தின் மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு தொடர் பான விவகாரங்களை கையாளும் துறைக்கு தகவல் கமிஷனர் சுஷ்மா சிங் உத்தரவிட்டுள்ளார்.

கருணை மனு தள்ளுபடி செய்யப் பட்ட நிலையில், தனது வழக்கு தொடர் பான விசாரணையை பற்றி அறிந்து கொள்ள மரண தண்டனை விதிக் கப்பட்ட பேரறிவாளனுக்கு வாய்ப்ப ளிக்க வேண்டும் என அந்த உத்தர வில் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஓவியக் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இராமநா தன் நுண்கலைக்கழக இறுதி வருட மாணவர்களினால் நடத்தப்படும் ஓவியக் கண்காட்சி மற்றும் கலை நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை முதல் தொடர்ந்து மூன்று நாட்க ளுக்கு முற்பகல் 9 மணிமுதல் பிற் பகல் 4.30மணிவரை மருதனார் மடம் இராமநாதன் நுண் கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

வீசப்பட்ட வர்ணங்கள் என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இக் கண்காட்சி நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன், சிறப்பு விருந்தின ராக யாழ்.பல்கலைகழக நடனத்து றைத் தலைவர் திருமதி கிருபைராஜா அருட்செல்வி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுகளில் சித்திரம் மற் றும் வடிவமைப்புத்துறை இறுதி மாணவர்களின் ஓவியக்கண்காட்சி, நடனத்துறை மாணவர்களின் நடன நிகழ்ச்சி, இசைத்துறை மாண வர்களின் இசை நிகழ்வுகள் என் பன இடம்பெறவுள்ளன. (அ-5)



சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான சுயாதீன அமைப்பான கபே அமைப்பினால் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் நேற்று நடத்தப்பட்ட தேசிய அடை யாள அட்டை வழங்குவதற் கான நடமாடும் சேவையில் பெருமளவானவர்கள் கலந்து கொண்டு விண்ணப் பங்களைவழங்கியிருந்தனர். இதனைப் படத்தில் காணலாம்.

(படம்:- எஸ்.ஆர்.கரன்)

# பெண்களின் உரிமைகளை பலவீனப்படுத்த அரசு முயற்சி

## ரோசி எம்.பி.குற்றச்சாட்டு

அரசியலில் பெண்களின் பிரதி நிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டு மென மேடைகளில் முழங்கும் **அரசாங்கம்** மறுபுறம் இது தொடர் பில் பாராளுமன்றத்தில் தான் கொண்டு வந்த தனிநபர் பிரேர ணைக்கு தடை விதித்து பெண்க ளின் உரிமைகளைப் பறித்துள்ளது எனக் குற்றம் சாட்டும் ஐ.தே.கட்சி ஏும்.பி. ரோசி சேனாநாயக்க, தெற்கா சியாவில் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்த நாடு இல ங்கையாகும் என்றும் தெரிவித்தார்.

ராஜகிரியவிலுள்ள தேசிய தோட் டத் தொழிலாளர் சங்க மண்டபத் தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே ரோசி சேனாநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகை யில்,

கடந்த 10 ஆம் திகதி பெண்க ளின் அபிவிருத்தி தொடர்பான வலைப் பின்னல் ஏற்பாடு செய்த செயலமர்வு சபாநாயகர் தலைமை யில் பாராளுமன்றத்தில் நடைபெற் றது. இதில் பிரதமர், மகளிர் விவகார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அமைச்சர்கள், எம்.பிக்கள் என பலர் கலந்து கொண்டு அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதி கரிப்பட வேண்டுமென வலியுறுத்தி னர்.

ஆனால், மறுநாள் 11 ஆம் திகதி பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்ட அரசியலில் பெண் களின் பிரதிநிதித்துவத்தை அதிக ரிக்க வேண்டுமென்ற எனது தனி நபர் பிரேரணையை பாராளு மன் றத்தில் முன்வைக்கவிடாது அமைச் சர் தினேஷ் குணவர்த்தனவினால் சட்டப் பிரச்சினையொன்று முன் வைக்கப்பட்டு தடுக்கப்பட்டது.

இவ்வாறு தனி நபர் பிரேரணை கொண்டு வரப்படும் போது சட்டமா அதிபரின் அங்கீராம் தேவையென் றும் அமைச்சர் தினேஷ்குணவர் த்தன வாதத்தை முன்வைத்தார்.

ஆனால், அண்மையில் பாரா ளுமன்ற உறுப்பினரான அதுரலிய ரத்ன தேரர் உட்பட பல அரச தரப் பினர்கள் தனிநபர் பிரேரணை களை கொண்டுவந்தனர். ஆனால், அதன் போது சட்டமா அதிபரின் அங்கீ காரம் கோரப்படவில்லை.

எனவே, அரசாங்கம் வேண்டு மென்றே எனது தனிநபர் பிரே ணையைத் தடுத்து நிறுத்தியுள்ளது. இதன் மூலம் பெண்களுக்கு உரிமை கள் வழங்குவதை அரசாங்கம் தடுத் துள்ளது. இது மிகவும் கவலைக்கு ரிய விடயமாகும்.

**தெற்காசியா**

இந்தியா, பாகிஸ்தான், நேபா ளம், பூட்டான், மாலைதீவு என தெற் காசிய நாடுகளில் பெண்களுக்கு அரசியலில் 30 வீதம் ஒதுக்கப்பட் டுள்ளது.

ஆனால், முதன் முதலாக வாக் குரிமை கிடைக்கப் பெற்ற இலங் கையில் மட்டும் பெண்களுக்கு 7 வீதத்திற்கும் குறைவான இடமே ஒதுக்கப்படுகிறது.

**வடக்கு**

வடக்கில் 89 ஆயிரம் கணவனை இழந்த பெண்கள் வாழ்கின்றனர். மேலும் பெரும்பாலான கர்ப்பிணிப் பெண்கள், பிள்ளைகள் போஷாக் கின்மையால் வாடுகின்றனர்.

ஆனால், அரசாங்கம் இவர்களை வாழ வைப்பதற்கு எதுவிதமான திட் டங்களையும் முன்னெடுக்க வில்லை.

இவ்வாறு அனைத்து வழிகளி லும் பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்படாது பறிக்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# அடிக்கல் நாட்டினார் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய கூட்டிணைக்கப் பட்ட தனியார் பஸ் கம்பனிகளின் அலு வலகத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பண்ணைக்கு அண்மித்த பகுதியிலேயே இவ் அலுவலகம் அமையவுள்ளது என அதன் தலைவர் கங்காதரன் தெரி வித்துள்ளார்.

இவ் அலுவலகத்திற்கான அடிக் கல்லை பாரம்பரிய கைத்தொழில் கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா நேற்று முன் தினம் மாலை 5 மணியளவில் நாட்டி வைத்தார்.

இவ் அலுவலக கட்டடப் பணி கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, அடுத்த வருடத்திற்குள் பூர்த்தியா கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ் வின் போது, யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, தனியார் பேருந்து சங்கத்தின் உப தலைவர் உறுப்பி னர்கள் உட்பட பலர் கலந்து கொண் டிருந்தனர்.

இக் கட்டடம் 4.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள் ளதாகவும் இந் நிதி தமது தனியார் பேருந்துஉரிமையாளர்களிடமிருந்தே திரட்டப்படுகின்றது எனவும் தலை வர் கங்காதரன் தெரிவித்தார். (அ-4)

# 1000 ரூபா கொடுப்பனவு

கரவெட்டி பிரதேசத்தில் உள்ள மூத்த பிரஜைகளுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒவ்வொரு மாத மும் 5 ஆம் திகதி தொடக்கம் 12 திகதி வரை வழங்கப்படுமென கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறி வித்துள்ளார்.

இதன்படி ஓகஸ்ட் மாத கொடுப் பனவு 5 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-60)

# கன்னிப் பசுக்களை பதிவு செய்க

கன்னிப் பசு வளர்ப்பு திட்டத்தின் கீழ் ஒரு மாதத்திற்கு உட்பட்ட பசுக் கன்றுகளை பதிவு செய்ய முடியும் என கரவெட்டி கால்நடை வைத்திய அதி காரி தெரிவித்துள்ளார்.

பதிவு செய்பவர்களுக்கு கன்று களை வளர்க்க 10 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் நியமனம் நாட்டுக்கு ஆரோக்கியமற்றதாம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறுகிறது

(கொழும்பு)

**இந்தியாவின் றோ உளவுப் பிரிவின் ஆலோசனையும் சம்பந்தனின் அரசியல் வியூகமும் இணைந்தே முன்னாள் நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரனை வடமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தியதன் பின்னணியாகும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர குற்றம் சாட்டியுள்ளார்.**

சர்வதேசத்தால் அங்கீகரிக்கப் படக் கூடிய விக்னேஸ்வரனை நியமித்ததன் மூலம் கூட்டமைப்பு தனது விடுதலைப்புலி பிரதிநிதித்துவத்தை மறைக்க முனைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாவை சேனாதிராஜா முழு நேர விடுதலைப் புலிகளின் ஆதரவாளர். இதனை அனைவரும் அறிவார்கள். விசேடமாக இந்தியாவுக்கு இது நன்றாகத் தெரியும்.

அத்தோடு இலங்கையில் தனித் தமிழீழம் உருவாவதையும் இந்தியா ஒருபோதும் விரும்பாது.

எனவே, மாவை சேனாதிராஜாவை வடமாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதை இந்தியா விரும்பாது. அதேவேளை விக்கினேஸ்வரனின் இரண்டு மகன்மாரும் சிங்களப் பெண்களையே மணந்துள்ளனர்.


இது மட்டுமல்லாது உயர்பதவி வகித்த படித்தவர் விக்னேஸ்வரன். இதனை சர்வதேசத்திற்கு கூட்டமைப்பு எடுத்துக்கூறும்.

விக்னேஸ்வரனால் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் படித்த புத்திஜீவியான அவர் சர்வதேசத் துடன் ஒத்துப் போகக் கூடியவர் என்றும் கூட்டமைப்பினால் எடுத்தியம்ப முடியும். இதுதான் சம்பந்தனின் தந்திரமான வியூகம்.

எனவே, இந்தியாவின் உளவுப் பிரிவான றோ வின் ஆலோசனையும் சம்பந்தனின் தந்திரமான அரசியல் வியூகமும் இணைந்தே விக்கினேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்க வைத்தன.

இது நாட்டுக்கு ஆரோக்கிய மற்ற பயங்கரமான ஒரு சூழ்நிலையாகும். எனவே, ஜனாதிபதி இதனை தடுத்து நிறுத்த அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

விக்கினேஸ்வரனுக்கு அமைச்சர் பதவியோ அல்லது வெளிநாட்டு தூதுவர் பதவியையோ வழங்கி முதலமைச்சர் வேட்பாளர் போட்டியிலிருந்து அவரை வெளியேற்ற வேண்டும் என் றார். (அ-2)




தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் பதக்கம் பெற்ற மாணவர்களை வடக்கு மாகாண ஆளுநர் சந்திக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் பதக்கம் வென்ற ஒரு பகுதி மாணவர்கள், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட கல்வி அதிகாரிகளுடன் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளீன், என்.குமார்)

# பாடசாலை சேவை பேருந்துகளில் ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் அறிமுகம்

பாடசாலை மாணவர்களுக்காக செயற்படுத்தப்படும் சிசுசரிய பாடசாலை சேவை பேருந்துகளில் ஜீ.பி. எஸ். (புவியிடங்காட்டி தொழில் நுட்பம்) தொழில்நுட்பத்தை துரிதமாக அறிமுகப்படுத்தியுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்தது.

பாடசாலை பேருந்து சேவையில் ஆயிரத்து 384 பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. குறித்த பேருந்துகள் வேகமாக செல்லுதல், மெதுவாக செல்லுதல், உரிய பேருந்து தரிப்பிடங்களில் நிறுத்தாது செல்லுதல், இடைவழியில் தேவையின்றி நிறுத்தப்படுதல், பஸ் தரிப்பிடங்களில் பயணிகளை ஏற்றாது செல்லுதல் போன்ற சகல நிலைமைகளும் இதன் மூலம் அவதானிக்கப்படும்.

பேருந்துகளில் பொருத்தப்படும் இலத்திரனியல் உபகரணம் செய்மதி தொழில்நுட்பத்தினூடாக செயற்படும் தொழில்நுட்ப கட்டுப்பாட்டு பிரிவுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

பேருந்துகளின் தகவல்கள் தொடர் ச்சியாக இதில் பதியப்படும். தூர சேவை பேருந்துகளில் இந்த தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தலைவர் ரொசான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பானதும் ஒழுங்கானதுமான போக்குவரத்து சேவையை அதிகரிப்பதற்காக ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் பாடசாலை பேருந்துகளில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

## ஆஸி. பயணிக்க உதவிய குற்றச்சாட்டில் மூவர் கைது

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு ஆட்களை அனுப்ப உதவிய குற்றச்சாட்டின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மாவனல்ல, நீர்கொழும்பு மற்றும் நகுலுகமுவ பிரதேசங்களில் வசித்து வருபவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர்கள் திக்வெல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து 30 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை மூன்று, கடவுச்சீட்டு மற்றும் உபகரணங்கள் பலவும் கைப் பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் கடந்த 5 ஆம் திகதி சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு 60 பேரை அனுப்பி வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது. (அ-2)

# சிங்கள மொழிமூல போட்டி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய மட்டத்திலான 2 ஆம் தேசிய மொழியான சிங்கள மூலமான போட்டி நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை 8.30 மணி முதல் யாழ். வேம்படி பெண்கள் உயர் தர பாடசாலையில் நடைபெறவுள்ளன.

பேச்சு, வாசிப்பு, எழுத்துருவாக்க போட்டிகளாக நடைபெறவுள்ள மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்கென யாழ். வலய மட்ட பாடசாலைகளில் இருந்து விண்ணப்பங்களை அனுப்பிய பாடசாலைகளின் போட்டியாளர்கள் தவறாது போட்டிகளில் பங்கு கொள்ளுமாறு யாழ். வலய 2 ஆம் தேசிய மொழி சிங்கள சேவைக்கான யாழ். வலய ஆசிரிய ஆலோசகர் ப.இராமகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

மேலும் போட்டிகளில் பங்கு கொள்ளும் போட்டியாளர்களுக்கான இலக்கங்கள் போட்டித் தினத்தன்று வழங்கப்படும் எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது. (அ-5)

# புத்தகாயா குண்டுவெடிப்புச் சம்பவம்; சந்தேகநபரின் வரைபடம் வெளியீடு

(கொழும்பு)

புத்தகாயா குண்டுவெடிப்பு தொடர்பாக பலரிடம் விசாரணை நடத்திய தேசிய புலனாய்வு அமைப்பு தாக்குதலில் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் ஒரு நபரின் வரைபடத்தை வெளியிட்டுள்ளது.

புத்தகாயா கோவிலில் கடந்த 7 ஆம் திகதி அடுத்தடுத்து 10 வெடி குண்டுகள் வெடித்தன. இதில் 3 பேர் காயம் அடைந்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்தி வருகிறது. சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடத்தப்பட்ட 6 பேரும் விடுவிக்கப்பட்ட நிலையில் குற்றவாளிகள் அடையாளம் காணப்படவில்லை.

இந்தத் தாக்குதலில் 3 அல்லது 4 நபர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று உள்துறை மந்திரி ஷிண்டே தெரிவித்தார்.

இந்நிலையில் குண்டுவெடிப்பு தொடர்பாக பலரிடம் விசாரணை நடத்திய தேசிய புலனாய்வு அமைப்பு தாக்குதலில் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் ஒரு நபரின் வரைபடத்தை நேற்று முன் தினம் வெளியிட்டுள்ளது.

தாக்குதல் நடந்து 9 நாட்களுக்குப் பின் முதல் முறையாக வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விசாரணையைத் தொடங்க திட்டமிட்டுள்ளனர். (அ-2)

# நாணயத்தாள்களை கடத்த முயன்றவர் கைது

பெருமளவான வெளிநாட்டு நாணயத் தாள்களைக் கடத்திச்செல்ல முயன்ற நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நாணயத்தாள்களை சுவிஸ் நாட்டுக்கு கடத்த முற்பட்ட வேளை நேற்று முன்தினமிரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதான குறித்த நபரிடமிருந்து ஒரு இலட்சத்து 15 ஆயிரம் யூரோக்களும் 21 ஆயிரம் சுவிஸ் பிராங்குகளும் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வெளிநாட்டு நாணயத் தாள்களின் மொத்தப் பெறுமதி சுமார் 2 கோடியே 29 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. சுங்கப் பிரிவினர் இவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டந்தெரிந்த நபர் முதலமைச்சரானால் அரசுக்கு தலைவலி ஆரம்பித்துவிடும்

## மனம் திறக்கிறார் சம்பிக்க



(கொழும்பு)

**விடுதலைப்புலிகளின் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்தின் மறு அவதாரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன். இந்தியா உட்பட சர்வதேசத்துடன் இணைந்து தமிழீழத்திற்கான இரண்டாவது போரா ட்டத்தை கூட்டமைப்பு ஆரம்பித்துள்ளது என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

வடமாகாண சபை தேர்தலுக்கு முன்னர் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் அதிகாரங்கள் வலுவிழக்கச் செய்யப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் அனைத்து பௌத்த மக்களும் நாமும் உள்ளோம். ஆனால் தற்போது காணப்படுகின்ற சூழலானது பிரிவினைவாதிகளுக்கு சாதகமாகவே காணப்படுகின்றது. இதற்கு அரசாங்கம் முழுப்பொறுப்பும் கூறவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில்,

வடமாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்தின் இழப்பை நிரப்புவதற்காக விக்னேஸ்வரனை கூட்டமைப்பு தெரிவு செய்துள்ளதாகத் தெரிகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கையும் ஒன்றிணைத்து மாகாணத்தில் வரதராஜப் பெருமாள் செயற்பட்டதைவிட மிகவும் ஆபத்தான சூழலே எதிர்வரும் நாட்களில் வடமாகாணத்திலும் ஏற்படப் போகின்றது.

ஏனெனில் சி.வி. விக்னேஸ்வரன் போன்ற சட்டம் நன்கு தெரிந்த ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வடக்கில் முதலமைச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அன்று தொடக்கம் இலங்கைக்கு தலைவலி ஆரம்பித்து விடும். அவ்வாறானதொரு நிலையே ஏற்படப் போகின்றது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நன்கு ஆராய்ந்த பின்னரே சி.வி. விக்னேஸ்வரனை நிறுத்தியுள்ளார். இவர்களின் நோக்கம் மத்திய அரசுடன் வடமாகாணத்தில் மோத வேண்டும். அதற்கு பின்னர் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்ற அதிகாரங்களை முழு அளவில் சட்ட ரீதியாக பெற்றுக்கொண்டு தனி தமிழீழ ஆட்சிக்கான அடித்தளமே இன்று இடப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் இந்தியா மற்றும் சர்வதேச பிரிவினைவாத புலி ஆதரவாளர்களும் உள்ளார்கள். எனவே அரசாங்கம் உண்மையான சூழலைப் புரிந்துகொண்டு வடமாகாண சபை தேர்தலுக்கு முன்னர் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் திருத்தங்களைச் செய்து அதிகாரங்களை வலுவிழக்கச் செய்ய வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் ஏற்படும் ஆபத்துக்களுக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.

ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டில் எவ்விதமான மாற்றமும் இல்லை. தேசப்பற்றுள்ள அனைத்து மக்களும் எம்முடன் ஒன்றிணைந்தே உள்ளார்கள். வடமாகாண சபை தேர்தலின் ஊடாக தனி தமிழீழம் உருவாவதை தடுக்க தேவையான அனைத்து போராட்டங்களையும் முன்னெடுப்போம்.

அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ போராட்டத்திற்கும் உயிர் கொடுப்பதாகவே கூட்டமைப்பின் செயற்பாடு அமைந்துள்ளது. அன்ரன் பால சிங்கத்தின் அவதாரத்தை இன்று சி.வி. விக்னேஸ்வரன் எடுத்துள்ளார். இதனையும் தோல்வியடையச் செய்ய வேண்டும் எனக் கூறினார். (அ)

# தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் (NVQ) கற்கை நெறிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி வீட்டுமின்னிணைப்பு (NVQ) மட்டம் 3, முக அலங்காரம் (NVQ) மட்டம் 3 ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் இப்பயிற்சி நெறிகள் பிரான்பற்று தொழிற்பயிற்சி நிலையத்தில் இம்மாதம் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இக்கற்கை நெறியை பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், கல்வித் தகைமை கற்கைநெறி ஆகியவற்றை குறிப்பிட்ட சுயவிபரக்கோவையினை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை முல்லையடி பிரான்பற்று என்ற முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# சர்வதேச நீதிமன்றில் ஜனாதிபதியை நிறுத்த சதி

## பிரதமர் ஜயரட்ன கண்டனம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை நீதிமன்றில் நிறுத்த வேண்டுமென சிலர் கோரி வருகின்றனர் எனவும் இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதமர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சர்வதேச நீதிமன்றுக்கு ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் மட்டுமன்றி நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களையும் ஆஜர்படுத்த வேண்டும்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க நாடாளுமன்றின் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெற்றது. 30 ஆண்டுகளாக நீடித்த கொடூர போரை ஜனாதிபதி தைரியமாக இல்லாதொழித்தார்.

இம் முயற்சிக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச பாரியளவில் ஒத்துழைப்பு வழங்கினார். இவ்வாறு இருவரையும் சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றில் ஆஜர்படுத்த எவருக்கும் இடமளிக்கக்கூடாது.

எவரேனும் இவ்வாறான சூழ்ச்சித் திட்டங்களை தீட்டினால் அதற்கு எதிராக மக்கள் பலத்தை பிரயோகிக்க நேரிடும். நாட்டின் சமாதானத்தை சீர்குலைப்பதற்கு வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தேர்தல் காலங்களில் அவசரதேவைகளின் போது இராணுவ ஒத்துழைப்பு பெறப்படும்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியினரால் முன்வைக்கப்பட்ட இரண்டு நிபந்தனைகளை அரசாங்கம் நிராகரித்துள்ளது. வடக்கு மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த நிபந்தனைகளை விதித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரை முகாம்களுக்கு மட்டும் வரையறுத்தல் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் ஆகிய கோரிக்கைகளை அரசாங்கம் நிராகரித்துள்ளது.


எனினும் வடக்கில் பக்கச்சார்பற்ற தேர்தலை நடத்துமாறும். இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

858 தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விடுதலை செய்ய தான் தயாரில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை வடமாகாணசபைத் தேர்தலின் போது பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அவசர நிலைமைகளின் போது தேவை ஏற்பட்டால் இராணுவத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும் என தெரிவித்துள்ளது.

தேசியப் பாதுகாப்பு தொடர்பில் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளத் தயாரில்லை என பாதுகாப்புச் செயலாயளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ-2)



வடமராட்சி மாலுசந்தி ஸ்ரீ வரதராஜா விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம் பெற்றபோது. (படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதிகை மலை



## ஆன்மீகம் 63

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

...எளியோரைக் கண்டு வருந்தாதவர்- வருந்தத்தக்க நிலையை ஒருநாள் அடைவர். உணவுப் பொருட்களில் கலப்படம் செய்பவர்கள்- செயற்கையான பஞ்சத்தை ஏற்படுத்தி- பணம் பார்ப்பவர்கள்- பதுக்கி வைத்து- வயிற்று நோய்க்காரர்களாக மறுபிறவியில் பிறப்பெடுப்பார் என்பது திண்ணாகும்! மனித குலத்தைத் தாக்கும் நோய்களின் மொத்த எண்ணிக்கை நான்காயிரத்து நானூற்று நாற்பத்தெட்டாகும். வந்த வியாதிக்கான முன்ஜென்மத்தை ஆராய்ந்தறிந்து அதற்கு முதலில் கன்ம நிவர்த்தி செய்ய வேண்டும். அப்படி செய்த பின் வைத்தியம் பார்க்க வேண்டும். இல்லையேல் நோய் தீராது- அதோடு அந்த வைத்தியம் பார்ப்பவரையும் கன்மவினை பற்றிக்கொள்ளும். வைத்தியமும் பலிக்காமல்போகும். அதோடு அந்தக்கொடிய வினை அந்நோயாளியின் வாரிசுகளையும் தொடர்ந்து பற்றும். உதாரணமாக உலகில் இன்று வளர்ந்து பரவிவரும் சர்க்கரைநோய் இன்று இது குழந்தைகளை- வாலிய வயதினரைக்கூட வாட்டி வதைக்கிறது. இது பரம்பரை நோய் என எல்லா வைத்திய முறைகளும் ஒப்புக்கொள்கின்றன.

சக்கரை வியாதி மேகநீரால் ஏற்படுவதாகும். இந்த நோய்க்கு முதலில் இறையானவன், அகத்தியருக்கும் முற்காலத்தில் வாழ்ந்த அரஹரன் என்ற மன்னன் என்று அகத்தியர் கூறுகிறார்! இந்த கர்ம வினையை வேரறுக்க சிவாலயங்களுக்குச் சென்று சிவபூஜை செய்ய வேண்டும். நந்தி தேவருக்கு 101 குடம் பால் அபிஷேகம் செய்யவேண்டும். நந்தியை வலம்வந்து வணங்க வேண்டும். கோதானம் செய்வதோடு பத்து முறை ஓம்சாந்தியும் செய்து கொள்ள வேண்டும்! பிறகு வைத்தியம் செய்தால்தான் பலிக்கும்- கன்மவினை அகலும். நமக்கு அறிமுகமான அல்லது கேள்விப்பட்டிருந்த வாழ்வாங்கு வாழ்ந்திருந்த ஒரு செல்வந்தர் வறிய நிலைக்கு தள்ளப்பட்டார் என்ற செய்தியைக் நாம் கேட்கும்போது ஐயோ பாவம் என்று வருந்துகிறோம். அவருக்கா இந்தநிலை பாவம் என்று பரிதாபப்படுகிறோம். தெரிந்த ஒருவர் விபத்துக்குள்ளானதைக் கேள்விப் படும்போது அதிர்ச்சியுடன் அப்படியா பாவம் என்று வேதனைப்படு கிறோம். பாவம்! நம்ம பக்கத்துத்தெரு கோவிந்தசாமி மகளுக்கு பதினாறு வயதாகியும் வயசுக்கு வரவில்லையாமே என்று ஆதங்கப்படுகிறோம்! இது போன்ற பல்வேறு இரங்கக்கூடிய எந்த செய்தியைக் கேட்டாலும் பரிதாபப்படக்கூடிய எந்தக் காட்சியைப் பார்த்தாலும் பார்ப்பவர் வாயிலும் ஐயோ பாவம் என்பது போல் பாவம் என்னும் சொல் இன்றியமையாத சொல்லாகி இவற்றுக்கெல்லாம் செய்த பாவம்தான் காரணம் என்பதை அவர்களை அறியாமலே சொல்லும் சொல் வழக்கு நம்மிடையே கொண்டு விட்டதை பார்க்கும்போது மனிதன் படும் எல்லா துன்பங்களுக்கும் அவன் பூர்வ ஜென்மத்திலோ, இந்த ஜென்மத்திலோ அறிந்தோ, அறியா மலோ செய்த பாவம்தான் காரணம் என்று நிரூபிக்க பல சான்றுகள் உள்ளன.



பிரம்மரிஷி மலையில் அன்னை சித்தர் ராஜ்குமார் சுவாமியுடன் தவயோகி சுந்தர மகாலிங்கம், தவயோகி தவசிநாதன், இலங்கை காரைதீவு கணேஷ் சுவாமி

ஆணிமாண்டவ்யா! மாபெரும் தவசி! பிரம்ம நிலை கண்ட மகாமுனிவர். அவர் சிறுவனாக இருந்தபோது விளையாட்டாக தும்பி பூச்சிகளைப் பிடித்து அதன்வாலில் முள்ளை சொறுகி அது துடிதுடிப்பதை வேடிக்கை பார்ப்பாராம்! அந்த பாசத்தின் சம்பளமான இறைவன் தந்த தண்டனை அவர்- மா முனிவர் என்று உயர் நிலையடைந்தும் விடவில்லை! தொடர்ந்து-அதனால் அவர் அரசன் அரண்மனையில் திருடியதாக குற்றம் சாட்டப்பட்டு அரச ஆணைப்படி கழுமரத்தில் ஏற்றப்பட்டார். வலியால் துடித்தவர் அதை மற்ற ஆழநிலை தியானத்தில் ஆழந்திருந்தார்.

தொடரும்

# இலங்கையில் தடைசெய்யப்பட்ட உலகின் முன்னணி சஞ்சிகை- "ரைம்"

உலகின் முன்னணி சஞ்சிகையான அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ரைம் வார இதழ் கடந்தவாரம் கட்டுநாயக்க விமானநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது. பின்னர் சஞ்சிகை தடை செய்யப்பட்டு சுமார் 4 ஆயிரம் பிரதிகளை சுங்கப் பகுதியினர் கைப்பற்றிக் கொண்டார்கள். சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள சஞ்சிகை ஒன்று இலங்கையில் தடை செய்யப்படுவது இதுதான் முதல்முறை என்பதால் விவகாரம் சர்வதேச கவனத்தைப் பெற்றிருக்கின்றது. ஊடக சுதந்திரம் தொடர்பில் முக்கியமாக பேசப்படும் நிலையில் இந்தத் தடை, அதுவும் அமெரிக்காவின் முன்னணி சஞ்சிகை ஒன்றின் மீதான தடை அனைவரின் ஊடக சுதந்திரத்துக்காக குரல் கொடுக்கும் அமைப்புகளின் கவனத்துக்குச் சென்றிருக்கின்றது.

ரைம் தடை செய்யப்படுவதற்குக் காரணம் மியன்மாரின் பௌத்த மதத் துறவியான விராது என்பவரைப் பற்றியும் அவரது 969 என்ற இயக்கம் பற்றியும் வெளியாகியிருந்த கட்டுரைதான். இலங்கையின் பலம் வாய்ந்த முன்னணி பௌத்த தேசியவாத அமைப்பான பொதுபலசேனாவின் செயற்பாடுகளுடன் 969 இயக்கத்தையும் ஒப்பிட்டு இந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பொதுபலசேனாவுக்கு சீற்றத்தைக் கொடுத்தது. பொதுபலசேனா கொடுத்த அழுத்தம்தான் இந்தத் தடைக்குக் காரணம் எனவும் கூறப்படுகின்றது.

மியன்மாரின் பின்லேடன் எனக் குறிப்பிடப்படும் பௌத்த மதத் துறவி அல்லது மதத் த்லைவரான விராது இன்று அந்நாட்டில் மிகவும் புகழ் பெற்ற ஒருவர். மியன்மாரின் இரண்டாவது பெரிய நகரான மண்டலேயில் அமைந்திருக்கும் ஒரு விகாரையிலிருந்துதான் அவர் தன்னுடைய போதனைகளை வெளியிடுகின்றார். அவரது உபதேசங்களைக் கேட்பதற்கு நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு தினமும் கூடுகின்றார்கள். ஒரு அமைதியான நிகழ்வாக இது தோன்றினாலும் விராதுவின் உபதேசம் மிகவும் சூடானதாகத்தான் இருக்கும். உங்களுடைய இரத்தம் கொதித்து வெகுண்டு எழவேண்டிய தருணம் இது என விராது உணர்ச்சி வசப்பட்டவராக உபதேசிக்க, அவரது உரையின் சூட்டில் மியன்மாரில் பௌத்தர்களின் இரத்தம் கொதித்தெழுகின்றது.

பௌத்தர்களின் இரத்தம் கொதித்தெழுவது முஸ்லிம்கள் இரத்தம் சிந்துவதில் முடிகின்றது. பௌத்த மதக் குழுக்கள் முஸ்லிம் மக்களை இலக்கு வைக்கின்றன. இந்தப் பின்னணியில் முஸ்லிம்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. இதனைவிட மேலும் பெருந் தொகையானவர்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளார்கள். முஸ்லிம்கள் மீதான இந்தத் தாக்குதல்கள் பல மாதங்களாகத் தொடர்ந்து கொண்டிருந்த போதிலும் மியன்மார் அரசாங்கம் அதனைக் கண்டும் காணாமலும் இருந்தது. மனித உரிமை அமைப்புக்ளின் கரிசனை குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.




மியன்மாரில் சுமார் ஆறுகோடி மக்கள் உள்ளார்கள். இதில் மிகவும் சிறுபான்மையினரான ஐந்து வீதம் மட்டுமே முஸ்லிம்கள். ஆனால் இந்த முஸ்லிம்கள் மியன்மாருக்கும் அதன் கலாசாரத்துக்கும் அச்சுறுத்தல் என்று விராது கருதுகின்றார். அல்லது அவ்வாறு போதிக்கின்றார். "முஸ்லிம்கள் மிகவும் விரைவாகப் பல்கிப் பெருகுகின்றார்கள். அவர்கள் எங்களுடைய பெண்களைக் கவர்ந்து கற்பழிக்கின்றார்கள்" என்று விராது ரைம் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியின்போது குறிப்பிட்டிருக்கின்றார். "முஸ்லிம்கள் எமது நாட்டை ஆக்கிரமிக்க நினைக்கின்றார்கள். ஆனால், நான் அதற்கு அனுமதிக்க மாட்டேன். மியன்மாரை நாம் ஒரு பௌத்த நாடாக வைத்திருக்கவே விரும்புகின்றோம்" எனவும் அவர் உறுதிப்படத் தெரிவித்திருக்கின்றார். அவரது உணர்ச்சிகரமான உரை அவருக்குப் பின்பாக பெருந் தொகையானர்வர்களை ஒன்று திரட்டுகின்றது.

இணையம்

தொடரும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# மன்னனின் குரங்கு



லட்சுமி புரத்தில் நந்தன் என்ற குரங்காட்டி வசித்து வந்தான். அவனிடம் ஓர் ஆண்குரங்கும், பெண் குரங்கும் இருந்தன. லட்சுமி புரமும், அதன் சுற்றுவட்டார கிராமங்களும் மருங்காபூரி ஜமீன் தாரின் ஆதிக்கத்தில் இருந்தன. நந்தன் தினமும் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு, ஒவ்வொரு கிராமமாகச் சுற்றி வந்து தன் குரங்குகளை வைத்து வேடிக்கை காட்டுவான்.

**அம்புலிமாமா கதைகள்**

பிறகு, இரண்டு குரங்குகளும் கையில் தட்டை ஏந்திக் கொண்டு மக்களிடையே சுற்றி சாடையாக காசு கேட்க, அவர்களும் சில்லறைகளைப்போட்டு அனுப்புவார்கள். அந்த வருமானத்தைக் கொண்டு நந்தனும், அவன் மனைவியும் வயிற்றுப் பிழைப்பைச் சமாளித்து வந்தனர். எப்படியாவது தன் குரங்குகளை மருங்காபூரி ஜமீன் தாரின் முன் வித்தை செய்வித்து அவர் மனதைக் கவர்ந்து அவரிடம் விவசாயம் செய்யத் தனக்கு ஒரு சிறிய நிலம் பெற்றுவிடவேண்டும் என்றும் நந்தன் நெடுநாளாக கனவு கண்டு கொண்டிருந்தான்.

ஒருநாள் கங்கைபுரத்தில் குரங்கு வித்தை காட்டிக் கொண்டிருக்கையில் திடீரென மழை பெய்யத் தொடங்கியதால், நந்தன் தன் மனைவி மற்றும் குரங்குகளுடன் அருகிலுள்ள அனுமார் கோயிலுக்குள் புகுந்தான். அவர்களைக் கண்டதும் அனுமார் கோயில் அர்ச்சகருக்கு எரிச்சல் உண்டாயிற்று.

"உன் குரங்குகள் கோயிலை அசுத்தம் செய்துவிடும்! நீ அவற்றை அழைத்துக்கொண்டு வேறு எங்காவது செல்!" என்று அவர் அதட்ட, தயவு பண்ணுங்கள் "ஐயா! கொட்டும் மழையில் நான் வேறு எங்கே போவேன்?" என்று நந்தன் கெஞ்சிக் கொண்டிருக்கையில் சற்றும் எதிர்பாராமல் பெண் குரங்கு அர்ச்சகர் முன் சென்று தன் வயிறைத் தொட்டுக் காட்டிவிட்டு, கீழே விழுந்து அவரை வணங்கியது.

பெண் குரங்கை உற்றுநோக்கிய அர்ச்சகர் வியப்புடன், "ஆகா! இந்தப் பெண் குரங்கு கர்ப்பமாக உள்ளது என்பதையே என்னிடம் சுட்டிக்காட்டியது. இத்தகைய அறிவாளியான குரங்கை , அதுவும் அனுமாரின் பிரதிநிதியை இந்த நிலையில் தங்கவிடாமல் விரட்டுவது பாவம்!" என்றவர் நந்தனை நோக்கி, "பிரசவம் ஆகும் வரை நீ இங்கேயே தங்கு!" என்று அனுமதி கொடுத்தார்.

சில மணிநேரங்களிலேயே ,பெண் குரங்கு ஓர் ஆண் குட்டியை ஈன்றது.



உடனே, தகப்பன் குரங்கு அர்ச்சகரைச் சென்று வணங்கி, கையில் ஏதோ கேட்டது. நந்தனின் மனைவி,



"அர்ச்சகரே! தாங்கள் இடம் கொடுத்தற்கு நன்றி கூறுகிறது. மேலும், தன் பிள்ளையின் எதிர்காலத்தைப் பற்றி உங்களிடம் ஆருடம் கேட்கிறது" என்றாள்.

"நான் மனிதர்களுக்குத்தான் ஆருடம் சொல்வது வழக்கம்!" என்றவர், பிறகு ஒரு தாளில் குட்டி பிறந்த நேரத்தை எழுதி, ஏதோ கணக்குப் போட்டார். பிறகு, நந்தனை நோக்கி, "இப்போது பிறந்துள்ள ஆண் குட்டி மற்றக் குரங்குகளை விட இது அபாரமாக வித்தை காட்டும்.

ஆனால், ராஜ வம்சத்தினரைத் தவிர, மற்றவர்களின் காணிக்கையை இது ஏற்காது!" என்றார். "ஆகா! என் கனவு பலிக்கும் நாள் வந்துவிட்டது!" என்று குதூகலித்த நந்தன், பிறகு அர்ச்சகருக்கு நன்றி தெரிவித்து, விடை பெற்றுக் கொண்டான்.

ஒரே ஆண்டில் பல அபாரமான வித்தைகளைக் கற்றுக்கொண்ட குட்டிக்குரங்கு சென்ற இடமெல்லாம் காண்பவர்களின் பலத்த கைதட்டலைப் பெற்றது. ஆனால் அர்ச்சகர் கணித்த படியே, அவர்கள் தரும் காணிக்கைகளை அது ஏற்க மறுத்து வந்தது. அதையே ஒரு பெரிய வியப்பான விடயமாக எடுத்துக் கொண்டு, பொது மக்கள் அந்தக் குரங்கை மிகவும் போற்றிப் புகழ்ந்துவிட்டு, சில்லறைகளை அவற்றின் பெற்றோரிடமே கொடுத்தனர்.

காண வந்தவர்களிடமெல்லாம் நந்தன் அதன் பெருமையை எடுத்துக் கூறி, "ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களிடம் மட்டுமே இது காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்" என்று கூறுவான். இதனால், மக்கள் அதைச் செல்லமாக மன்னனின் குரங்கு என்று அழைத்தனர். இவ்வாறு, குட்டிக் குரங்கின் பெயரும், புகழும் எல்லா கிராமங்களிலும் பரவி, இறுதியாக மருங்காபூரி ஜமீன்தாரின் காதுகளையும் எட்டியது.அதை ஜமீன்தார் ரசிக்கவில்லை. ஆகையால் தன் திவானை அனுப்பி விசாரித்து வரும்படி கூறினார்.

முழு விவரங்களுமறிந்த பின் திவான் ஜமீன்தாரிடம் வந்து, "ஐயா! ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களிடம் மட்டுமே அந்தக் குரங்கு பணத்தை ஏற்குமாம்! எனக்கு ஒருயோசனை தோன்றுகிறது. நமது ஜமீனுக்கு அந்தக் குரங்காட்டியை அழைத்து, குரங்கை வித்தைகள் காட்டச் சொல்வோம். நீங்கள் மாறுவேடமணிந்து வாருங்கள்! கடைசியில் எல்லோரும் காசு கொடுக்கும் போது நீங்களும் அதற்குக் கொடுங்கள்!

அது உங்களிடம் மட்டுமே பெற்றுக் கொண்டால நீங்கள் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர் என்று மக்கள் புரிந்து கொள்வர். அப்படி நடந்தால் , அவனுக்கு ஏதாவது பரிசு கொடுங்கள்!" என்று கூறியவுடன், ஜமீன்தாருக்கு அந்தக் குரங்கைக் காண ஆர்வம் ஏற்பட்டது.

உடனே, அவர் அதற்கான ஏற்பாட்டைச் செய்தார். செய்தி கேட்டு, நந்தனுக்கு மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அவன் ஆவலுடன் எதிர்பார்த்த அந்த நாள் வந்தது.

ஜமீன் மைதானத்தில் பெருந்திரள் கூட, நந்தன் குட்டிக்குரங்கை வித்தைகள் காட்டச் செய்தான். ஆனால், அவனுக்குப் பெருத்த அதிர்ச்சியைத் தந்தது. அன்றைய நிகழ்ச்சியைக்காண ஜமீன்தார் வராததுதான்! தன்னுடைய மனக்கோட்டைகள் இவ்வாறு இடிந்துபோகும் என்று நினைக்காத நந்தன் அவ்வளவாக ஆர்வமின்றி, அன்றைய நிகழ்ச்சிகளை குட்டிக் குரங்கின் மூலம் ஓர் இயந்திரம் போல் செய்வித்தான்.


நிகழ்ச்சி முடிந்ததும்,எல்லோரும் குட்டிக்குரங்கை சோதிக்க சில்லறைகளைத் தந்தபோது, வழக்கப்படி அது யாரிடமும் ஏற்க மறுத்து விட்டது. கடைசியில் பெரிய தலைப்பாகை அணிந்த, ஆஜானுபாகுவான ஓர் அயலூர் ஆசாமி ரூபாய் நோட்டுகள் தர, அதை ஆவலுடன் பெற்றுக்கொண்டு அவருக்கு வணக்கமும் தெரிவித்தது.

"ஆ" என்று வியப்புடன் கூவிய அந்த ஆள் , தன் வேடத்தைக் கலைக்க, அதுதான் மாறுவேடத்திலிருந்த ஜமீன்தார் என்று அனைவருக்கும் தெரிந்தது. ஜமீன்தார் கூடியிருந்த மக்களைப் பார்த்து, "இன்று நடந்த நிகழ்ச்சியிலிருந்து, மிருகங்களின் அறிவாற்றலைக் கண்கூடாக காண நேர்ந்தது.

எத்தனை சிறிய குட்டிக் குரங்கு எத்தனை அற்புதமாக வித்தைகள் செய்தது? அது மட்டுமல்ல! மிருகங்களுக்கும் நம்மைப்போல் சில அபூர்வ சக்திகள் உண்டென்று அறிந்தேன். இதற்குப் போய் ஏன் இந்தப் பெயர் என்று நான் முதலில் எண்ணினேன்.

இப்போது அந்தப் பெயர் பொருத்தமானது என்று உணர்கிறேன். இத்தகைய மிருகங்களைப் பாதுகாப்பது என் கடமை! ஆகவே, விரைவிலேயே மிருகங்களின் சரணாலயம் ஒன்று தொடங்கப் போகிறேன். மன்னனின் குரங்கு அவற்றின் தலைவனாக இருக்கும்.

இறுதியாக, குட்டிக் குரங்கிற்கு வித்தைகள் கற்பித்த நந்தனுக்கு ஒரு காணி நிலம் தானமாக வழங்கப் போகிறேன்! என்று கூறி முடிக்க, கூடியிருந்தவர்கள் கை தட்டினர்.




தான் கேட்காமலே தனக்கு நிலம் தானமாகக் கிடைத்ததை எண்ணி நந்தன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

# 17.07.2013-16.08.2013



## துலாம்

சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**எதிர்காலம் பற்றி எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டேயிருக்கும் துலாம் இராசிநேயர்களே!**

**குருபார்வையில் சனி! குழப்பங்கள் தீரும் இனி!**

## குரு பார்வை சனி; குழப்பங்கள் தீரும் இனி!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சனி- சந்திரயோகத்தோடு மாதம் தொடங்குவதால் சந்தோஷங்கள் அதிகரிக்கும். சஞ்சலங்கள் தீரும். சிந்தித்த காரியங்கள் எல்லாம் சிறிது தாமதப்பட்டாலும் முடிவில் வெற்றி கிடைக்கும். மந்த நிலைமாறி மகத்துவங்கள் உருவாகும் மாதமாகக் கூட இம்மாதத்தைக் கருதலாம்.

வந்த வாய்ப்புக்களை உபயோகப்படுத்திக்கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். எந்த வாய்ப்பு வந்தாலும் அருகில் இருக்கும் அனுபவஸ்தர்களிடம் ஆலோசனை கேட்டுக்கொள்ளுங்கள். ஏன் என்றால் ஜென்ம சனியின் ஆதிக்கம் பரிபூரணமாக இருக்கிறது. ஜென்ம ராகு அலைச்சல்களைக் கொடுக்கும். சப்தம கேது ஆதாயத்தைக் குறைக்கும்.

குடும்பத்தில் மூன்றாம் நபர்களின் தலையீட்டைத் தவிர்ப்பதும் உங்கள் புத்திசாலித்தனமாகும். அருகில் இருப்பவர்களை விமர்சனம் செய்வதன் மூலம் விஸ்வரூபம் எடுத்த பிரச்சினைகள் வியாழனின் பார்வையால் இனி நல்ல முடிபுக்கு வரும். மனோபயத்தை அகற்றிக் கொள்ளுங்கள். மக்கள் செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர்.

வீடு மாற்றச் சிந்தனைகளும் நாடு மாற்றச் சிந்தனைகளும் மேலோங்கிக்கொண்டே இருக்கும். சனியின் ஆதிக்கம் பாதிக்கு மேல் முடிவடைந்தால் இனிபயப்படத்தேவையில்லை. கோபத்தைக்குறைத்துக் கொள்ளுங்கள். தீபத்தைப் பார்த்து தரிசித்து தித்திப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். குறிப்பாக சனிபகவானுக்கு எள்தீபம் ஏற்றுவது நல்லது. அது மட்டுமல்லாமல் அன்னதானம், வஸ்திர தானம் செய்வதன் மூலம் சனிபகவானை மகிழ்வித்தால் அன்றாட வாழ்க்கையில் வரும் துயரங்கள் அகலும்.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜுலை 18ஆம் திகதி சிம்ம இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். எனவே, பொருளாதார நிலை மேலோங்கும். அந்நிய தேச வாய்ப்புகள் அலைமோதும். எண்ணிய காரியங்களை எளிதில் நிறைவேற்றிக் கொள்வீர்கள். கண்ணியமிக்க மனிதர்களால் காரிய வெற்றி கிட்டும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். வளைகாப்பு நடத்துவது முதல் மணி விழா கொண்டாடுவது வரை இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறப் போகிறன.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. அடுத்தவர்களுக்கு ஜாமீன் சொல்வதன் மூலம் சில பிரச்சினைகள் ஏற்படலாம். வாய்ப்புகளை உபயோகப்படுத்திக்கொள்ள முடியவில்லையே என கவலைப்படுவீர்கள். அம்பிகை வழிபாடு இன்பம் சேர்க்கும்.

**கடக புதனும் சிம்ம புதனும்**

கடக இராசியில் ஜுலை 30 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். முன்னோர் சொத்துக்களில் லாபம் கிடைக்கும். தந்தைவழி ஒத்துழைப்போடு ஒரு புதிய தொழில் தொடங்க முன்வருவீர்கள்.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிம்ம இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வாரிசுகளின் நலன் கருதியும் செலவிடுவீர்கள்.

இம்மாதம் மாருதி வழிபாடு மகிழ்ச்சியை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பணத்தேவைகள் பூர்த்தியாகும் மாதமாக கருதலாம். பாசம் மிக்க உறவினர்கள் கைகொடுத்து உதவுவர். என்ன இருந்தாலும், ராகு- கேதுக்களின் ஆதிக்கம் இருப்பதால் கணவன்- மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அப்பொழுதுதான் ஒற்றுமை பலப்படும். இடம், பூமி போன்றவைகள் உங்கள் பெயரிலேயே வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். நூதன பொருட் சேர்க்கை உண்டு.

மாதக் கடைசியில் பயணங்களால் பலன் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். ராகு- கேது வழிபாடு நன்மையை வழங்கும்.

### சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**எதிலும் வெற்றி என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

**குருமங்கள யோகம்! குடும்பத்திற்கு வந்தது யோகம்!**

## குரு மங்கள யோகம்! குடும்பத்திற்கு வந்தது யோகம்!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் செவ்வாய் குருவுடன் கூடி குருமங்களயோகத்தை உண்டாக்குகிறார். தனாதிபதி குரு தன் வீட்டைத் தானே பார்ப்பதால் பணப்புழக்கம் நன்றாகவே இருக்கும். பாராட்டும் புகழும் கூடும். வாக்கு, தனம், குடும்பம் என்று வர்ணிக்கப்படும் இரண்டாம் இடத்தை குரு பார்ப்பது யோகம்தான்.

கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலும். செய்யும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்திலும் அனுகூலம் கிட்டும். குடியிருக்கும் வீட்டைக்கூட ஒருசிலர் விலைக்கு வாங்க முற்படுவர். விரய சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் வேண்டிய பொருட்களை வேண்டிய நேரத்தில் வாங்க இயலும்.

பத்துக்கு அதிபதி சூரியன் ஒன்பதில் சஞ்சரிக்கிறார். அதோடு முத்தான சுக்ரனும் இணைந்து மாதத்தின் முதல்நாள் தொடங்குகிறது. எனவே, தொழில்வளம் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்தவர்கள் எல்லையை விட்டு விலகுவர். அழியாத புகழுக்கு அஸ்திபாரமிடும் விதத்தில் ஆன்மீகப் பணியொன்றில் ஈடுபாடு செலுத்தப்போகிறீர்கள்.

புகழ், கௌரவம் கூடும். காண்பவர்கள் பாராட்டும் அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும். ஆறில்கேது இருப்பதால் ஆரோக்கியத்தொல்லை மட்டும் அடிக்கடி ஏற்பட்டு அகலும். சீராக உடம்பை வைத்துக் கொள்ள ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். அதுமட்டுமல்ல ஆனைமுகன் வழிபாடும் ஆஞ்சநேயர் வழிபாடும் சனிக்கிழமை தோறும் செய்து வருவது நல்லது. தும்பிக்கையான் மீது நம்பிக்கை வைத்தால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பொன், பொருட்களும் வந்திடும். புதிய பாதையும் புலப்படும்.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜுலை 18 ஆம் திகதி சிம்ம இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக வாழ்க்கைத் துணை வழியே உத்தியோகத்திற்கு செய்த ஏற்பாடுகள் கைகூடி உதிரி வருமானங்களைக் கொண்டு வந்து சேர்க்கும். அந்நியதேச அனுகூலமுண்டு.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். இது ஒரு வழிக்கு நன்மைதான். பன்னிரெண்டுக்கு அதிபதியான சுக்ரன் நீச்சம் பெறும்பொழுது கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்ற வாசகம் செயற்படும் அல்லவா? எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**கடக புதனும் சிம்ம புதனும்**

ஜுலை 30 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். புத- ஆதித்ய யோகம் செயற்படப்போகிறது. கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். பயணங்களால் பலனுண்டு. வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். அரசு வழியில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும்.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிம்மத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன்விளைவாக மிகுந்த நற்பலன்கள் உங்களுக்கு வந்து சேரப்போகிறது. புதன் லாபாதிபதியாகவும் விளங்குவதால் பத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில்வளம் சிறப்பாக இருக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார நிலையை பெருக்கிக் கொள்வீர்கள்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய செவ்வாய் தோறும் முருகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கு சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பணப்புழக்கம் நன்றாக இருக்கும். பக்கத்தில் இருப்பவர்களின் பாசமழையில் நனைவீர்கள். மக்கள் செல்வங்களால் மகிழ்ச்சி ஏற்படும். மகிழ்ச்சி தரும் விதத்தில் குடும்ப உறவு இருக்கும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். வீடு, இடம் வாங்குவதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். மாதத்தின் மையப்பகுதியில் விருந்தினர் வருகை உண்டு. உடன்பிறப்புகளால் ஒரு நல்ல காரியம் நடைபெறும். ஆஞ்சநேயர் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்நோவ்டென் அமெரிக்காவால் வேட்டையாடப்படுவாரா..?

டில்லி சென்றிருந்த அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி, ஸ்நோவ்டென்னை நாட்டிற்குள் அனுமதித்தாலோ அல்லது ஸ்நோவ்டென்னிற்கு தஞ்சம் வழங்கினாலோ பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும், சட்டங்களை ரஷ்யா மதித்து நடக்க வேண்டும் என்றும், எச்சரித்த தன் எதிரொலியாகவே, விளாமிடிர் புட்டின் தடாலடியாக ஸ்நோவ்டென்னைத் திருப்பி அனுப்பமாட்டேன் என்று கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இதனைக் கடுமையாக விமர்சித்திருக்கும் புருக்ளின், சட்ட மையத்தின் மூத்த அறிஞரான மைக்கல் ஓ ஹன்லோன் அமெரிக்கா ஸ்நோவ்டென் விடயத்தில் மிகக் கடுமையாக இருப்பதை விளங்கிக்கொள்ள முடிந்தாலும்கூட ஜோன் கெரி எதற்காக ரஷ்யா மீது இவ்வளவு கடுமையாக நடந்துகொள்கின்றார் என்று விளங்கவில்லை என்று கூறியுள்ளார்.

மேலும், அமெரக்காவின் கழுத்ததை ஏற்கனவே நெரித்துக் கொண்டிருக்கும் ஈரான், சிரியா, வடகொரியா மற்றும் உள்நாட்டின் தலையிடி விவகாரங்களில் அமெரிக்கா மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் போது, ரஷ்யாவுடனான இராஜதந்திர முறுகலையும் சேர்த்துச் சுமக்கும் நிலையில் அமெரிக்கா இன்று இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தனைக்கும் ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் எந்தவிதமான கைதிகள் பரிமாற்றம் மற்றும் நாடு கடத்தல் ஒப்பந்தங்கள் எதுவுமே இது வரையில் கைச்சாத்திடப்படவில்லை. இப்படியான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கும் நாடுகளின் ஒப்பந்தங்களிலேயே ஆயிரம் சட்ட ஓட்டைகள் உள்ளன. இல்லாத ஒப்பந்தத்தை இருப்பதாக எண்ணி அமெரிக்கா ரஷ்யாவை மிரட்ட ஆரம்பித்திருப்பது அமெரிக்காவின் பலவீனத்தையே காட்ட ஆரம்பித்துள்ளது.

ரஷ்யாவின் விமான நிலையத்தினுள்ளேயே ஸ்நோவ்டென், தொடர்ந்தும் தஞ்சம் அடைந்திருப்பதாக அறியப்படுகின்றது. இவரது கடவுச் சீட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்ததை அடுத்து, அவர் அங்கிருந்து புறப்பட முடியாமல் உள்ளதாகத் தெரிகின்றது. இவரது தொடர்ச்சியான பயணத்திற்கு ஒரு பிரயாண ஆவணம் ஈக்குவடோர் நாட்டினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. ஆனாலும் இதனை ஈக்குவடோர் அரசாங்கம் மறுத்துள்ளது. அந்த ஆவணம் ஹொங்கொங்கிலிருந்து ஸ்நோவ்டென் புறப்படும் போதே அங்குள்ள ஈக்குவடோர் தூதுவர் ஃபிடெல் நவரேஷ் பெயரில் அச்சிடப்பட்டதாகவும், அதில் அவரது கையொப்பம் இல்லை என்றும் தகவல்கள் கூறியுள்ளன.

அப்படியான ஆவணம் எதையும் ஈக்குவடோர் அரசாங்கம் அளிக்கவில்லை என்றும் இன்னமும் ஸ்நோவ்டென் ஈக்குவடோர் எல்லைக்குள்ளோ அல்லது ஈக்குவடோர் தூதுவராலயத்திலோ அடைக்கலம் புகவில்லை எனவும் தகவல்கள் கூறியுள்ளன.

பிரித்தானியாவிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் சரணடைந்துள்ள ஜூலியன் அசாஞ்சே தான் ஸ்நோவ்டென்னிற்குரிய ஒழுங்குகளை ஈக்குவடோர் மூலம் செய்திருப்பதாகவே அமெரிக்கா நம்புகின்றது. அமெரிக்கா ஈக்குவடோர் அரசிற்கு வழங்கியுள்ள சுங்கவரியில்லாத ஏற்றுமதி வர்த்தகச் சலுகையை மீளப் புதுப்பிக்க வேண்டிய காலமிது.

இதனைக் காரணம் காட்டி அமெரிக்கா, ஈக்குவடோர் அரசாங்கத்தை எச்சரித்து மிரட்டியுள்ளது. இதனால், கோப மடைந்த ஈக்குவடோர் ஜனாதிபதி ராஃபெல் கொரியே இந்தச் சுங்கவரி விலக்கு வர்த்தக ஒப்பந்தம் எங்களுக்கு முக்கியமானதுதான். ஆனாலும், எந்த மிரட்டலுக்கும் அடிபணிந்து போகமாட்டோம். வர்த்தகமானது இருபக்க புரிந்துணர்வுடன் நடக்க வேண்டுமே அல்லாது மிரட்டலுக்கு அடிபணிந்து நடப்பதல்ல. ஈக்குவடோர் தன்னிச்சையாகவும் தீர்க்கமாகவும் உங்கள் சுங்கவரிச் சலுகையை இரத்துச் செய்கின்றது என்று கூறியுள்ளார்.

இது மேலும் அமெரிக்காவிற்கு அடிபணியாத ஒரு திடமான ஜனாதிபதியென ராஃவல் கொரியேவை நிரூபித்துள்ளது. இந்த விடயங்கள் மேலும் இராஜதந்திரச் சிக்கல்களோடு பொருளாதார வீழ்ச்சிகளையும் அமெரிக்காவிற்கு ஏற்படுத்தப் போகிறது. ஒபாமா கூறியிருக்கும் இந்த, வெறும் 29 வயது கணிணித் திருடன் அமெரிக்காவை ஆட்டிப்படைப்பதை அமெரிக்காவால் தவிர்த்துக்கொள்ள முடியாமல் உள்ளது.

பிரான்ஸ் அரசாங்கமும் ஐரோப்பியத் தலைமைகளும் தம் தலையணைக்கு அடியிலேயே ஒட்டுக்கேட்கும் கருவிகளை, அமெரிக்கா வைத்ததைப் பொறுக்காமல், அமெரிக்கா நோக்கிய கண்டனங்களையும் விசாரணைகளையும் மேற்கொண்ட வண்ணம் உள்ளனர். பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா-ஒல்லோந், தம்மை இப்படியாக வேவு பார்ப்பதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என்று கூறியுள்ளார். எம்மை உளவு பார்த்தது நிரூபிக்கப்பட்டால், அந்தப் பாரிய குற்றத்திற்கு அமெரிக்கா பதில் சொல்லியாக வேண்டும். இது இரு கண்டங்களுக்கிடையிலும் பாரிய பிணக்கை ஏற்படுத்தும் என ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தலைவர் மார்ட்டின் சுல்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தன்மீதான நம்பிக்கையை எமக்கு நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. நாம் அமெரிக்காவின் நடவடிக்கையால் அதிர்ச்சி அடைந்துள்ளோம் என ஜேர்மனியின் அதிபர் அஞ்சலா மேர்கல் அமெரிக்காவிற்குக் காட்டமாகத் தெரிவித்துள்ளார். தொடர்ச்சியாக ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய பொறுப்பாளர்களும் இத்தாலி அரசும் அமெரிக்காவினை கண்டித்தும் எச்சரித்தும் உள்ளன. இதன் வளைவாக ஒஸ்ரியாவினதும் பெல்ஜியத்தினதும் அமெரிக்கத் தூதுவர்கள் பெல்ஜியத்தின் வெளிவிவகார அமைச்சினால் அழைக்கப்பட்டுள்ளனர். இது அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை மற்றும் இராஜதந்திரம் ஆகியவற்றின் தோல்வியாகும்.

இதேவேளை, உலகத்தின் மனிதாபிமான சக்தியாக மனித உரிமைகளுக்காகச் செயற்படுபவர்களுக்குத் தஞ்சம் தரும் நாடான பிரான்ஸ் ஸ்நோவ்டென் கேட்ட தஞ்சக் கோரிக்கையை மறுத்துள்ளது. அமெரிக்காவின் சட்டதிட்டங்களுக்கு, விசாரணைக்கு உட்படுத்தப்பட இருப்பவருக்குத் தஞ்சம் வழங்குவது சிக்கலானது என்றும் அமெரிக்கா, போன்ற ஒரு ஜனநாயக நாடு விசாரிக்க விரும்பும் ஒருவருக்கு நாம் புகலிடம் வழங்கமுடியாது என்றும் மீண்டும் அமெரிக்காவின் பெரியண்ணா வாதத்தை வலியுறுத்துவது போல், பிரான்சின் உள்விவகார அமைச்சர் மனுவல் வால்ஸ் தெரிவித்துள்ளார். இது பிரான்சின் அரசியல் கட்சிகளிடையே பெரும் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.



பெரிய நாடுகள், அமெரிக்காவின் விரோதத்தைச் சந்திக் நேரிடும் என்பதற்காக விஸில் பிளோவர் என்று, இன்று சர்வதேச வல்லுநர்களால் தகுதிப் படுத்தப்பட்டிருக்கும் ஸ்நோவ்டெனுக்கு அடைக்கலம் கொடுப்பதிலிருந்து பின்வாங்கி உள்ள நிலையில் பொலிவியா, வெனிசுவேலா, நிக்கரகுவா, ஈக்குவடோர் போன்ற தென் அமெரிக்க நாடுகள் மிகவும் துணிவாக ஸ்நோவ்டென்னிற்கு அடைக்கலம் வழங்க முன்வந்துள்ளன.

பொலிவியா நாட்டின் அதிபரின் விமரனம் தொழிநுட்பக் காரணங்களிற்காக ஒஸ்ரியாவின் தலைநகரில் தரையிறக்க அனுமதி மறுக்கப்பட்டது. இருந்தும் இறுதியில் விமானம் தரையிறக்க அனுமதிக்கப்பட்டது. ரஷ்யாவிற்குச் சென்று திரும்பிய பொலிவியா ஜனாதிபதி ஏவோ மொரால்ஸின் விமானத்தில் ஸ்நோவ்டென் பயணம் செய்வதாக கிளப்பப்பட்ட வதந்தியினாலும் அமெரிக்காவின் சந்தேகத்தாலும் அமெரிக்கா விடுத்த ஆணையை ஏற்று வியன்னா சர்வதேச விமான நிலையத்தில் ஒரு நாட்டின் ஜனாதிபதியின் விமானம் என்ற சிறப்புரிமை கூட மறுக்கப்பட்டு அவரது விமானம் தடுத்து வைக்கப்பட்டது.

இதனை அடுத்து பிரான்ஸ் தனது வான் எல்லைக்குள் பொலிவிய ஜனாதிபதியின் விமானம் பறப்பதைத் தடை செய்தது. தொடர்ந்து போர்த்துக்கல்லும் தனது வான் எல்லையைப் பொலிவிய ஜனாதிபதியின் விமானத்திற்கு மூடியது. இது பெரும் இராஜதந்திரச் சிக்கல்களை உருவாக்கியது. இதே நேரம் சர்வதேச விதிகளை மீறிய பொலிவிய அதிபரின் விமானத்தில் உள்ளவர்களின் கடவுச் சீட்டுக்கள் அமெரிக்காவின் வேண்டுகோளின் பேரில் சோதனையிடப்பட்டன. அதில் ஸ்நோவ்டென் இல்லாமை உறுதிசெய்யப்பட்டது. உடனடியாக பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஒஸ்லோந்த் பிரான்ஸ் வான் எல்லையைப் பொலிவிய ஜனாதிபதியின் விமானத்திற்குத் திறந்துவிட ஆணையிட்டார். ஆனாலும், இது பொலிவிய பிரெஞ்சு உறவில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது. பொலிவியாவில் உள்ள பிரான்ஸ் தூதரகம் தாக்குதலுக்குள்ளானது. பிரான்சின் தேசியக்கொடி எரிக்கப்பட்டது. பொலிவிய வெளிவிவகார அமைச்சர் பொலிவியாவிற்கான பிரான்சின் தூதுவர்களை வெளியேற்றவேண்டும் என்ற கோரிக்கையினை விடுத்தார்.

அமெரிக்கா ஜனாதிபதி ஸ்நோவ்டென்னை வெறும் கணிணித் திருடன் என பராக் ஒபாமா மட்டுப்படுத்த முயன்றாலும், உண்மையில் ஸ்நோவ்டென்னைப் பிடிக்கப் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டபடி தான், அமெரிக்க தேசியப் பாதுகாப்புச் சபையும் அமெரிக்க உளவு நிறுவனங்களும் உள்ளன. அதற்குத் துணைபோக எண்ணும் நாடுகளும் தென் அமெரிக்க நாடுகளுடனான தமது இராஜதந்திர உறவில் விரிசல்களை ஏற்படுத்தி உள்ளது.

இவற்றைத் தாண்டி வெனிசுவேலாவும் நிக்கருவாவும் ஸ்நோவ்டென்னை வரவேற்கத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளன. வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கொலஸ் மடுறோ மற்றும் நிகாரகுவா ஜனாதிபதி டானியல் ஒட்டேகா தாம் ஸ்நோவ்டென்னுக்குத் தஞ்சம் அளிக்கத் தயாராக இருப்பதை உறுதிப்படுத்தி உள்ளனர். இதில் மொஸ்கோவிலுள்ள நிகாரகுவாத் தூதரகத்தில் ஸ்நோவ்டென் தஞ்ச விண்ணப்பக் கோரிக்கையை விடுத்துள்ளதாக டானியல் ஒட்டேகா தெரிவித்துள்ளார்.

ஸ்நோவ்டென் தனது டிவிட்டர் கணக்கில் தான் 21 நாட்டிடம் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். ஆனாலும், ஒரு நாடு இவருக்குத் தஞ்சம் அளிக்க முன்வந்துள்ளதாகவும் அதனை இப்போது தெரிவிக்க முடியாது என்றும் அதனை அறிவிப்பதின் மூலம் அமெரிக்காவின் அதிரடி நடவடிக்கைகளிற்கு இடமளிக்க மாட்டேன் என்றும் விக்கிலீக்ஸில் ஜூலியன் அசாஞ்சே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

ஸ்நோவ்டென் விவகாரத்தில் சர்வதேச நாடுகளுடன் பகைமையையும் நட்பு நாடுகளுக்கு மேலும் சிக்கல்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கும் அமெரிக்கா ஸ்நோவ்டென்னினால் தென் அமெரிக்காவில், தன் காலின் பகுதியிலேயே மிகவும் பலமான எதிராளிகளையும் ஒன்று சேர்த்துக் கொண்டுள்ளது. தனது பலத்தின் மீதே மிகவும் சந்தேகம் கொண்டுள்ள அமெரிக்கா தொடர்ந்தும் தனது வேட்டையைத் தோல்வியின் மத்தியிலும் தொடர்ந்து கொண்டுள்ளது.

நன்றி இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும்

## டெசோ தீர்மானம்

(சென்னை)

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொது நலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று டெசோ அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. தமிழீழ ஆதரவாளர் அமைப்பான டெசோ இலங்கை விவகாரங்கள் தொடர்பில் பல்வேறு தீர்மானங்களை தி.மு.கவின் தலைவர் கருணாநிதியின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தியும், தமிழக மீன்வர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் இடம்பெறவுள்ள இந்த ஆர்பாட்டத்தில், இலங்கையில் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் தடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டம் ஒரு முழுமையான அரசியல் தீர்வாக அமையாது எனவும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தி, அவர்களுடைய கருத்தைக் கேட்டு தீர்வு காண்பதுதான் , ஈழத் தமிழர்களின் நலனுக்கு உகந்த தீர்வாக இருக்கும் என்பதே டெசோ அமைப்பின் நிலைப்பாடாகும் எனவும் இவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் இலங்கை ஜனாதிபதி மற்றும் அவருடைய அமைச்சரவையில் உள்ளவர்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள் இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும் எனவே, இந்திய அரசு அந்த ஒப்பந்தம் எந்தவித திருத்தங்களும் இல்லாது நிறைவேற்றப்படுவதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் டெசோ வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுகின்றனர் மற்றும் பாரம்பரிய தமிழ் பிரதேசங்களில் இடம்பெறும் சிங்களக்குடியேற்றங்கள் தொடர்பிலும் டெசோ தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்நிலையில் , இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்து விசாரணை எதுவும் நடைபெறாத நிலையில், அங்கு இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என வலியுறுத்தும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (அ-2)




* 1656 - போலந்து மற்றும் லித்துவேனியப் படைகள் வார்சாவில் சுவீடனின் படைகளுடன் போரை ஆரம்பித்தன. சுவீடிஷ் படையினர் இப்போரில் வெற்றி பெற்றனர்.
* 1872 - ஐக்கிய இராச்சியத்திலும் அயர்லாந்திலும் இரகசிய வாக்கெடுப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
* 1916 - யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பலத்த சூறாவளியில் பலர் உயிரிழந்தனர். வீடுகள் மற்றும் பல தொலைத்தொடர்பு சாதனங்கள் சேதமடைந்தன.
* 1944 - இரண்டாம் உலகப் போர்: போரில் ஏற்பட்ட பல தோல்விகளை அடுத்து ஜப்பானியப் பிரதமர் ஹிடெக்கி டோஜோ பதவியைத் துறந்தார்.
* 1965 -சோவியத்தின் சோண்ட் 3 விண்கலம் ஏவப்பட்டது.
* 1966- நாசாவின் ஜெமினி 10 விண்கலம் ஏவப்பட்டது.
* 1977 - வியட்நாம் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.
* 1982 - குவாத்தமாலாவில் பெண்கள், குழந்தைகள் உட்பட 268 மாயன்பழங்குடியினர் இராணுவதினரால் படுகொலை செய்யப் பட்டனர்.
* 1995- கரிபியன் தீவான மொன்செராட்டில் சௌபியரே மலை வெடித்துச் சிதறியதன் காரணமாக மொன்செராட்டின் தலைநகரம் அழிக்கப்பட்டதுடன் மண்டலத்தின் மக்கள் தொகையின் மூன்றில் இரண்டு பகுதியினர் தீவை விட்டு வெளியேறினர்.
* 1997-மும்பையில் 10 சிறுவர்கள் பொலிஸாரினால் கொல்லப்பட்ட நிகழ்வுக்குப் பின்னர் சுமார் 8 ஆயிரம் தலித் மக்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.

பிறப்புகள்

* 1909-அந்திரே குரோமிக்கோ, சோவியத் ஜனாதிபதி (இ. 1989)
* **1918- நெல்சன் மண்டேலா, முன்னாள் தென்னாப்பிரிக்காவின் ஜனாதிபதி, கறுப்பினத் தலைவர், நோபல் பரிசு பெற்றவர்.**
* 1935-ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், இந்து ஆன்மீகத் தலைவர்.
* 1950- சேர் றிச்சர்ட் பிரான்சன், உலகின் பெரும் பணக்காரர்களுள் ஒருவர்

இறப்புகள்

* 1817 - ஜேன் ஆஸ்டின், ஆங்கில நாவலாசிரியை (பி. 1775)
* 1968-கோர்னெல் ஹேமன்ஸ் நோபல் பரிசு பெற்றவர்

சிறப்பு நாள்

* நெல்சன் மண்டேலா தினம் (ஐ.நா)

### நெல்சன் மண்டேலா



நெல்சன் மண்டேலா 1918 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் உள்ள குலு கிராமத்தில் பிறந்தார். இவரின் முழுப் பெயர் நெல்சன் ரோபிசலா மண்டேலா. நெல்சன் மண்டேலா என்றே பொதுவாக அழைப்பார்கள். இவர் சிறுவயதில் குத்துச் சண்டை வீரராகவே அறியப்பெற்றார்.

#### அரசியல்

1939 ஆம் ஆண்டில் தனது 21 ஆவது வயதில் கறுப்பின இளைஞர்களை ஒன்றிணைத்து கறுப்பின மக்கள் அடக்கப்பட்டு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டமைக்கு எதிராக நாம் போராட வேண்டும் என அறை கூவி கறுப்பின மக்களை விழிப்படையச் செய்வதில் வெற்றி கண்டார்.

#### சிறை

மண்டேலா 1962 இல் சிறையில் வைக்கப்பட்டார். ஏறத்தாழ 27 ஆண்டுகள் சிறையில் இருந்தார். உலக வரலாற்றிலேயே மண்டேலாவைப் போல இவ்வளவு நீண்ட காலம் சிறையில் வாடிய தலைவர்கள் யாரும் கிடையாது. பல ஆண்டுகள் அவரைத் தனிமைச் சிறையில் அடைத்து கொடுமை செய்தது தென்னாப்பிரிக்க அரசாங்கம். மனைவியைச் சந்திப்பதற்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டு கடுமையான காசநோய் ஏற்பட்டு மரணத்தின் எல்லைக்கே சென்றார். அதனால் வீட்டுச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

#### விடுதலைக்கான போராட்டங்கள்

மண்டேலாவை விடுதலை செய்யும்படி வற்புறுத்தி மண்டேலாவின் மனைவி தலைமையில் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் தொடர்ந்து நடந்து வந்தன.மன்னிப்பு கேட்டால் விடுதலை செய்கிறோம் என்று தென்னாபிரிக்க அரசு ஆசை காட்டியது. ஆனால், மண்டேலா மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார்.

#### விடுதலை

மண்டேலா 11.02.1990 அன்று சிறையிலிருந்து விடுதலை பெற்றார். இவர் விடுதலை பெற்றபோது (வயது 71) இந்நிகழ்வு உலகம் முழுவதும் நேரடியாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது. இவர் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியானார். 1999 ஆம் ஆண்டு தனது பதவியை விட்டு விலகினார். தற்போது நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

#### விருதுகள்

உலக சமாதானத்துக்காக மண்டேலா ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவர் சிறையில் இருக்கும்போதே இந்திய அரசு நேரு சமாதான விருது வழங்கியது.

1990 இல் இந்தியாவின் பாரத ரத்னா விருதும் வழங்கப்பட்டது. 1993 இல் உலக அமைதிக்கான நோபல் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டது. அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான மகாத்மா காந்தி சர்வதேச விருதும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னர் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் பிறந்த நாளான ஜுலை 18 ஆம் திகதியை சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக ஐ.நா. அறிவித்துள்ளது.

## அதிகாரப் பகிர்வே இலங்கைக்கு தீர்வு

### தயான் எழுதிய நூலில் சுட்டிக்காட்டு

இந்தியாவின் அனுசரணையுடன் இலங்கைக்கு வழங்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் மாத்திரமே ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கி தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கான ஒரேவழி என்று புதிதாக வெளியான நூல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின்இராஜதந்திரிதயான் ஜெயதிலகவினால் எழுதப்பட்ட நீண்ட யுத்தமும் உறைந்த சமாதானமும் என்ற நூலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி யுத்தத்தினால் இராணுவம் பெற்ற வெற்றியை 13 ஆம் திருத்தச் சட்டம் இல்லாது செய்து விடும் என்று வாதிட முடியாது. தற்போதுள்ளதீர்வுத்திட்டங்களில் அனைத்து தரப்புக்கும் தீர்வாக அமையக் கூடிய ஒரே விடயம் 13 ஆவது திருத்தச் சட்டமே.

எனவே, இந்த சட்ட திருத்தம் மாற்றப்படவோ , கைவிடப்படவோ கூடிய ஒன்று அல்ல என்று அவர் தமது நூலில் தெரிவித்துள்ளார். (அ-2)

## எக்னெலிகொட பிரான்சில் வசிப்பதாக கூறியது யார்?

### தடல்புடலான கருத்துக்கள்

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பாக பா.உறுப்பினர் ஹருந்திக வெளியிட்ட தகவலை ஹந்துன்நெத்தி மறுத்துள்ளார்.

காணாமற்போனதாகக் கூறப்படும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட பெல்ஜியத்தில் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹருந்திக பெர்னாண்டோ நீதிமன்றத்தில் வெளியிட்ட தகவலை ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நிராகரித்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட குறித்த தகவலை தமக்கு சுனில் ஹந்துன்நெத்தியே வழங்கியதாக ஹருந்திக பெர்னாண்டோ நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

எனினும் தான் அவ்வாறான தகவல் எதனையும் வழங்கவில்லை என்றும் இது குறித்து ஊடகங்களில் வெளியான செய்தியின் வாயிலாகவே அறிந்து கொண்டதாகவும் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.


ஹருந்திக பெர்னாண்டோ தற்போது சிறந்த அரசியல் நாடகராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஏற்கனவே பிரகீத் பிரான்சில் இருப்பதாக ஹருந்திக பாராளுமன்றத்தில் வைத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியில் அரச தாதியர்கள் சுகவீன விடுப்பு போராட்டம்

## வைத்தியசாலைகள் ஸ்தம்பிதம்





(யாழ்ப்பாணம்)

**அரச தாதியர்களின் சுகவீன விடுப்பு போராட்டத்தினால் வடக்கு உட்பட நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளும் நேற்றைய தினம் ஸ்தம்பிதமடைந்தன. இதனால் வைத்தியசாலையில் தங்கியிருந்து, கிளினிக்குக்காக வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர் நோக்கினர்.**

பெருமளவான நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

வெளிநோயாளர் பிரிவு, இரத்த வங்கிப்பிரிவு, தொற்று நோயத் தடுப்பு பிரிவு, விபத்துப்பிரிவு, பரிசோதனைக் கூடம் என நாளாந்தம் அதிகளவிலான நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றன மற்றும் பரிசோதனைகள் இடம்பெறுகின்றன பிரிவுகள் இயங்கா நிலையை அடைந்தமையினால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தாதியர்களின் சுகவீன விடுப்பு போராட்டம் முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை அறிந்திராதவர்கள் தூர இடங்களில் இருந்து வந்து வைத்தியசாலைகளில் நீண்ட நேரம் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதையும் பெரும்பாலான வைத்தியசாலைகளில் அவதானிக்க முடிந்தது.

விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று நேற்றைய தினம் வீடு திரும்ப வேண்டியவர்கள், தாதியர்களின் வரவின்மையினால் நேற்றைய தினம் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து இன்றே வீடு செல்ல வேண்டிய கட்டாய நிலைக்கும் தள்ளப்பட்டிருந்தனர்.

மொத்தத்தில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட தாதியர்களின் சுகவீன விடுப்பு போராட்டத்தினால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தமையை வைத்தியசாலைகளில் அவதானிக்க முடிந்தது.

இவ்விடயம் தொடர்பில் தாதியர் சங்கம் தெரிவிக்கையில்,

சுகவீன விடுப்பு போராட்டத்தை நோயாளர்கள் பாதிக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் மேற்கொள்ளவில்லை, மாறாக எமது சேவை அரசுக்கு புரிய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே முன்னெடுத்தோம்.

எமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு சுகாதார அமைச்சிடம் பலமுறை கோரிக்கை விடுத்திருந்தோம்.

ஆனால், அவையெதுவும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அவற்றை நிறைவேற்றக் கோரியே போராட்டத்தில் ஈடுபட்டோம்.

எனினும் அரசுக்கு ஆதரவான ஒரு சில தாதியர் சங்கங்கள் இப்பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப் போவதில்லை என கூறியிருந்தனர்.

இது தாதியர்களது சேவையைச் புறக்கணிக்கும் செயலாகும் என தெரிவித்துள்ளது.

இதேவேளை தாம் சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதில்லையென ஐக்கிய தாதியர் சங்கம் முன்னரே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை நேற்றுக்காலை 7 மணியளவில் ஆரம்பமாகிய இப் போராட்டம் இன்று காலை 7மணியுடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் பணிகள் வழமையாக நடைபெறவுள்ளன. (அ-4)

எனினும் தாதியர்களின் இப் போராட்டத்தினால் அவசர சிகிச்சை பிரிவுப் பணிகள் எவையும் பாதிக்கப்படவில்லையெனவும், நோயாளர்களின் நலன்கருதி அவசர சிகிச்சைப்பிரிவுகளில் தாதியர்கள் பணிப் புறக்கணிப்பை மேற்கொள்ளவில்லை என தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்கள் உட்பட நாட்டின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள அரசினர் பொது வைத்தியசாலைகளிலும் தாதியர்களின் இச் சுகவீன விடுப்பு போராட்டம் நடைபெற்று இருந்தது என தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தாதியர்களின் இச் சுகவீன விடுப்பினால் குறிப்பாக வடக்கில் யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்கள் பல இடையூறுகளையும், சிரமங்களையும் எதிர்நோக்கியிருந்தனர்.

அவசர சிகிச்சைப்பரிவு தவிர ஏனைய அனைத்துப் பிரிவுகளிலும் தாதியர்கள் பணிப்புறக் கணிப்பை மேற்கொண்டிருந்தமையால்

## மேலங்கியில் புத்தர் பெருமான்; வெளிநாட்டு பிரஜைகள் கைது

(திருகோணமலை)

திருகோணமலை புகையிரத நிலையத்தில் வைத்து வெளிநாட்டவர் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

இவர்கள் அணிந்திருந்த மேலங்கியில் புத்தர் பெருமானின் உருவம் பொறிக்கப்பட்டிருந்ததாலேயே கைது செய்யப்பட்டனர்.

புகையிரத நிலையத்தில் பயணிக்கவிருந்த பெரும்பான்மை இன மக்களின் கோரிக்கையை அடுத்தே இவர்கள் இருவரும் பொலிஸாரினால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

திருகோணமலை புகையிரத நிலையத்தில் பொலிவியா நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது பெண் நண்பியுடன் கொழும்பு செல்வதற்காக காத்திருந்துள்ளார்.

அவர்கள் இருவரும் அணிந்திருந்த மேலங்கியில் புத்தர் பெருமானின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது.

இதனை அவதானித்த சக பிரயாணிகள் இவர்களிடம் சென்று அணிந்திருந்த மேலங்கியைக் கழற்றுமாறு கேட்டுக்கொண்டனர்.

மொழி புரியாத குறித்த வெளிநாட்டவர்களால் அதனை செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் அங்கு குழுமியவர்கள் அவர்களின் செயற்பாட்டுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

சம்பவத்தையடுத்து புகையிரத நிலைய பொலிஸ் அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டதைத் தொடர்ந்து அவர்களது மேலங்கி கழற்றப்பட்டதுடன், வெளிநாட்டவர்கள் இருவரும் விசாரணைக்காக திருகோணமலை பொலிஸ்நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (அ-2)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தங்கப்பதக்க கூட்டமைப்பு நிறுவன கணக்காளரும் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளை தலைவருமான திருமதி [illegible] கனகசபை கலந்து கொள்ளவுள்ளார். (அ-5)

## டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் குறித்த அறிக்கை வெளியானது

(கொழும்பு)

இலங்கையின் மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் நுளம்புகள் பெருகக்கூடிய செடிகள் மற்றும் தாவரங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் அறிக்கை வெளியாகியுள்ளது.

சுகாதார அமைச்சும்,ஏனைய அமைச்சுக்களும் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றன. இருப்பினும் நுளம்பு பெருக்கம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. இது தொடர்பாக தற்போது வெளியாகியுள்ள ஆய்வறிக்கை அமைச்சரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

இந்த ஆய்வு குளங்கள், சிறு சிறு குழிகள், சேற்று நிலம், நீரோட்டமில்லாத வடிகான்கள் என்பவற்றிலும் மனித செயற்பாடுகளாலும், இயற்கையாகவும் உருவான சிறு அளவில் நீர் தேங்கும் இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.

இயல்பாகவே நீர் தேங்கிநிற்கும் இடங்களில் வளரும் செடிகள் நுளம்புகள் பெருக பெரிதும் துணைபுரியும் இடங்களாக இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது என்று மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் அனில் சமரநாயக்க கூறியுள்ளார்.

குறித்த ஆய்வில் தாழை, மூங்கில் மரங்களும், ரம்பை, அன்னாசி, கரணை கிழங்கு செடிகளும் மூங்கில் மரங்களின் அடிப்பாகங்களும் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அத்தோடு, நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களின் பௌதீக மற்றும் இரசாயன பண்புகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வுக்கு உட்படுத்திய செடிகள் மற்றும் மரங்களில் ப்ரிசீலா வகையை தவிர்ந்த ஏனைய மரங்களில் 50 வீதத்திற்கும் மேல் நுளம்பு பெருகுவது உறுதியாகியுள்ளது.

அதேநேரம் டெங்கு நோயை பரப்பும் ஈடிஸ் அல்போபிக்டஸ் இன நுளம்புகளில் 48 வீதமானவை அன்னாசி செடிகளில் பெருகுகின்றன. அத்தோடு ப்ரொம்லியா வகைகளில் 47.2 வீதமும், மரங்களின் அடிப்பாகங்களில் 42.2 வீதமும் நுளம்பு பெருகுகின்றன.


மேலும் தறிக்கப்பட்ட மூங்கில் மரத்தூள்கள் மூலம் 32.6 வீதமும் கரணை கிழங்கு செடியில் 27.4 வீதமும் ரம்பை, தாழையைச் சேர்ந்த பென்டனஸ் செடிகளில் 10.8 வீதமும் ரம்பை செடியில் 1.8 வீதமும் டெங்கு நுளம்பு பெருகுவது கண்டறியப்பட்டுள்ளது. ஏனைய நுளம்பு வகைகள் ரம்பை, தாழை மரங்களில் பெரிதும் பெருகுவதும் கண்டறியப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவை அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்ற

# ஜனாதிபதி நடவடிக்கை

### அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு



(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தை மிகவும் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார் என நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வவுனியா பேராற்றை மறித்து வவுனியா நகருக்கான குடிநீர்த் திட்டத்தை அமைக்கும் பணியில் பாதிப்படைந்துள்ள விவிசாயிகளுக்கு நட்டஈட்டை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா மாவட்டத்தில் குடிநீர்த்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டபோது அப்பிரதேசத்தில் விவசாய நிலத்தை கொண்டிருந்த மற்றும் அங்கு குடியிருந்த மக்களின் ஒத்துழைப்பு எமக்கு அதிகமாக தேவைப்பட்டது.

மஹிந்த சிந்தனையின் ஓர் அம்சமாக இக் குடிநீர்த்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் அந்த இடத்திலே இம் முறை பயிர்ச்செய்கையை செய்து இலாபத்தை ஈட்டலாம் என எண்ணிக்கொண்டிருந்த அந்த மக்களுக்கு நட்டஈட்டை வழங்கி வைக்கும் இச்சந்தர்ப்பத்தை நான் முக்கியமானதாக கருதுகின்றேன்.

இந்த அபிவிருத்தி பணியின் பலன்கள் இந்த மாவட்டத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் உரியதாக உள்ளன. அந்தவகையில் இத்திட்டத்திற்கு பங்களிப்பு செய்த மக்கள் போலவே எமது அமைச்சும் மிக வேகமாக இத்திட்டத்தை செய்து முடிப்பதற்கு முன் வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இந் நீர் விநியோகத்திட்டத்தை வெறுமனே ஓர் திட்டத்தை உள்ளடக்கியதாக இல்லாது குடிநீராகவும் விவசாய தேவைக்காகவும் மற்றும் நீரோடு சம்பந்தப்பட்ட தேவைகளுக்காகவும் சுகாதார தரம் மிக்க நீரை பெற்றுக்கொள்வதற்கும் எமது அமைச்சு இதனை முன்னெடுக்கின்றது.

இந்த வகையில் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களில் வவுனியா மாவட்டத்தில் மிகவும் சிறந்த அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை மாவட்ட விவசாயிகளுக்கும் உற்பத்தியில் ஆர்வமும் ஆசையும் காட்டும் விவசாயிகளுக்கும் பெருமளவான வளங்களை வழங்குவதற்கும் சேவைகளை வழங்குவதற்கும் இலகுவாகவுள்ளது என தெரிவித்தார். (ம-250-266)




## கிராமசேவகரின் அலுவலகத்தில் திருட்டு

(பூந்தோட்டம்)

கனகராயன்குளம் தெற்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிராமசேவகரின் அலுவலகம் உட்பட வர்த்தக நிலையங்களில் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.



நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு கனகராயன் குளம் தெற்கில் அமைந்துள்ள கிராமசேவகரின் அலுவலகத்தில் உள்ள அலுமாரிகள் உடைக்கப்பட்டுள்ளதுடன் அக் கட்டடத்தில் அமைந்துள்ள ஏனைய அலுவலக அறைகளும் உடைக்கப்பட்டு ஆவணங்கள் சிதறடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அருகில் அமைந்துள்ள வர்த்தக நிலையமும் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளதுடன் வீடொன்றினுள் புகுந்து அங்கிருந்து சேலைகள் திருடப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-266)

## நிர்வாகத் தெரிவு

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாலிநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினுடைய புதிய நிர்வாகத் தெரிவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் த.பிரிந்தாகரன் மேற்பார்வையின் கீழ் பாலிநகர் கிராம சேவகர் க.சுபராம் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பாலிநகர் பொதுநூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தலைவராக ப.யோகநாதன், செயலாளராக தே.கார்த்திகன் மற்றும் உப தலைவராக ச.தயாசீலன், உபசெயலாளராக செ.தங்கவேல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக உறுப்பினர்களாக 8 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-15)

## போக்குவரத்து வசதியை ஏற்படுத்த கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அம்பலபெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியன்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து சேவை இடம்பெறாமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்குறித்த இடங்களில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் போக்குவரத்து வசதி இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டபின் ஒரு வருடத்திற்கு போக்குவரத்து சேவை இடம்பெற்று பின்னர் இன்று வரை அரச தனியார் போக்குவரத்து சேவை இன்மையால் பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, உரியவர்கள் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம)

## துர்நாற்றம் வீசுவதால் மூக்கைப் பொத்தும் மக்கள்

(குருமன்காடு)

வைரவபுளியங்குள ஆதிவிநாயகர் கோவில் குளக்கட்டு வீதியில் கழிவுப் பொருட்கள் போடப்படுவதால் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு துர்நாற்றம் வீசுவதால் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினரிடம் பலமுறை தெரிவித்தும் எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் இவ்வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் பயணிகள் இருளில் பயணிக்க வேண்டிய நிலையுள்ளது.

இதனால் அவ்வீதியால் பயணிக்கும் மக்கள் விபத்துக்களை எதிர்கொள்ளவேண்டிய நிலையுமுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் மேற்குறித்த வீதியிலுள்ள கழிவுப் பொருட்களை அகற்ற நடவடிக்கை எடுப்பதுடன் வீதியில் மின் விளக்குகளையும் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-250)

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(பூநகரி)

பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டு கழகத்தால் வருடாந்தம் நடத்தப்படும் முன்னாள் கழக வீரர்களின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி எதிரவரும் ஒகஸ்ட் மாதம் 9, 10, 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்கள் தங்களது விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர் அல்லது செயலாளர் பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டு கழகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 0779902326 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறிய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9-84)

## அரசியல் களத்தில் ஒற்றுமைப்படுவோம்

### வினோ எம்.எபி. தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

அரசியல் களத்தில் நாம் ஒற்றுமைப்பட தவறுவோமானால் கனவு காண்பவர்களாகவே இருப்போம் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் 24 ஆவது வீர மக்கள் தினத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நாம் இளைஞர்களாக போராட்டத்தில் இணைந்து கொண்டபோதெல்லாம் நேர்மையான போராட்டத்தில் இணைந்து கொள்கின்றோம். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்கின்றோம் என்ற ஒரே மூச்சோடு எந்தவித இயக்க வேறுபாடு பிரதேச வேறுபாடுகளுமின்றி நாம் எல்லோரும் ஒற்றுமையாக போராடிய காலமிருந்தது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக நாம் எல்லோரும் எங்களுக்குள்ளே முட்டி மோதினோம். அதன் பலனை இன்று அனுபவிக்கின்றோம்.

ஆயுத போராட்ட காலத்தில் நாம் ஒற்றுமைப்பட முடியாமல், ஐக்கியப்பட முடியாமல் எமது இலட்சிய பாதையை நோக்கி செல்ல முடியாத நிலையில் எஞ்சியுள்ள அரசியல் களத்தில் ஜனநாயக ரீதியில் ஒற்றுமைப்பட தவறுவோமாக இருந்தால் நாங்கள் தொடர்ந்தும் கனவு காண்பவர்களாகவும் தமிழ் மக்களை ஏமாற்றுபவர்களாகவுமே இருக்க முடியும்.

ஆகவே, தற்போது உள்நாட்டிலும் அயல்நாடாக இருந்தாலும் சர்வதேச ரீதியாகவும் ஒற்றுமைப்பட வேண்டிய நிலைக்கு நாம் வந்துள்ளோம். எனவே, நாம் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளைத் தீர்க்க கூடிய ஒரு நிரந்தரமான தீர்வுக்காக ஓரணியில் இணைய வேண்டும் என தெரிவித்தார். (அ-2-266)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ■ பாடசாலை மதிய உணவில் நஞ்சு?

# மாணவர்கள் வைத்தியசாலையில்

## 20 பேர் உயிரிழப்பு; 35 பேர் கவலைக்கிடம்

(சாப்ரா)

பீகார் மாநிலப் பாடசாலையொன்றில் மதிய உணவு உண்ட மாணவர்கள் 20 பேர் உயிரிழந்துள்ளனர். 35 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



பீகார் மாநிலம் சரண் மாவட்டம் தர்மாசதி கந்தாவான் கிராமத்திலுள்ள அரசு ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு நேற்று முன்தினம் மதியம் அரிசி, பருப்பு வகைகள் மற்றும் சோயா பீன்ஸ் கலந்த மதிய உணவு வழங்கப்பட்டது.

இதை உண்ட மாணவர்கள் அடுத்தடுத்து வாந்தி எடுத்து மயங்கி விழுந்தனர். அனைவரையும் பாடசாலை ஆசிரியர்கள் உடனடியாக சாப்ரா நகர வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இந்நிலையில் நேற்று வரை பலியான மாணவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளமையால் பீகாரில் தொடர்ந்து பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் 48 மாணவர்களுக்கு பாட்னா அரசு மருத்துவக்கல்லூரி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இவர்களில் 35 பேர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**முதல்வர் நிதீஷ் பதவி விலக கோரிக்கை**

மாணவர்கள் பலியான சம்பவம் தொடர்பாக நேற்றையதினம் சாப்ரா மாவட்ட நீதவான் நீதிமன்ற வீட்டை பொதுமக்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். உணவில் விஷம் கலக்கப்பட்டதாக புகார் கூறியுள்ளனர்.

**சாப்ராவில் பந்த்: வன்முறை**

இதற்கிடையே இச்சம்பவத்தை கண்டித்து மற்றொரு எதிர்க்கட்சியான ராஷ்ட்ரீய ஜனதாதள கட்சி பந்த்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதனால் சாப்ரா மாவட்டத்தில் முழு கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது. பலியான மாணவர்களின் குடும்பத்திற்கு தலா 10 இலட்சம் ரூபா வழங்கிட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது. மேலும் ஆங்காங்கே வன்முறை சம்பவங்களும் நடைபெற்றன. பொலிஸ் வான்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் நொறுக்கியுமுள்ளனர். மேலும் விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. (2)

# எகிப்து கலவரத்தை அடக்க இராணுவம் சுட்டதில் 7 பேர் பலி!

(கெய்ரோ)

எகிப்தில் தொடர்ந்து நீடிக்கும் கலவரத்தை அடக்க இராணுவம் சுட்டதில் 7 பேர் பலியாகினர்.

இராணுவப் புரட்சி மூலம் எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த முகமது முர்சி பதவி நீக்கம் செய்யப்பட்டார். உச்ச நீதிமன்ற நீதிபதி அட்லி இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முர்சியின் ஆதரவாளர்களும் இஸ்லாமிய சகோதரத்துவ கட்சியினரும் கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இக் கலவரம் தொடர்ந்து நீடித்து வருகிறது. நேற்று முன்தினம் இப்





தார் நோன்பு திறந்தவுடன் ஆயிரக்கணக்கானவர்கள் தலைநகர் கெய்ரோ வீதிகளில் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் புகழ் பெற்ற தக்ரீர் சதுக்கம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. கலவரக்காரர்களை அடக்க இராணுவத்தினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். துப்பாக்கியாலும் சுட்டனர். இச்சம்பவத்தில் 2 பேர் தக்ரீர் சதுக்கத்திலும், 5 பேர் ஜிஷா பகுதியிலும் உயிரிழந்தனர். இவர்கள் தவிர 261 பேர் காயம் அடைந்தனர்.

கலவரம் ஏற்பட்ட சில மணி நேரத்தில் அமெரிக்க வெளியுறவுத் துறை துணை செயலாளர் பில் பர்ன்ஸ் கெய்ரோ வந்தார்.

இடைக்கால ஜனாதிபதி அட்லியை சந்தித்த அவர் இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டு கலவரத்தை முடிவுக்கு கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே, இராணுவத்தால் நியமிக்கப்பட்ட இடைக்கால ஜனாதிபதி அட்லி மன்சூர் தலைமையிலான 34 பேர் கொண்ட கேபினட் அமைச்சரவை நேற்று முன்தினம் பதவியேற்றது. பிரதமர் ஹசீம் ஆல்-பெப்லாவி, துணை பிரதமர் அப்துல் பாதா அல்-சிசியும் பொறுப்பேற்று கொண்டனர். (2)

## மலேசிய நீதிமன்றில் தமிழர்கள் மூவருக்கு மரணதண்டனை



(கோலாலம்பூர்)

மலேசிய இந்திய காங்கிரஸ் தலைவரைக் கொலை செய்த தமிழர்கள் மூன்று பேருக்கு மலேசிய நீதிமன்றம் மரண தண்டனை அறிவித்துள்ளது.

மலேசியாவில் ஆளும் கூட்டணியில் மலேசிய இந்திய காங்கிரஸ் கட்சி இடம் பெற்றுள்ளது. இபோ பரத் பகுதியில் இக்கட்சியின் பொருளாளராக இருந்தவர் சிதம்பரம் (வயது 64). இப்பகுதியின் இந்து தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவராகவும் சிதம்பரம் இருந்தார். கடந்த, 2009இல் இவர் வீட்டில் கொள்ளையடிக்க வந்த மணிமாறன் (வயது 24), சரவணன் (வயது 29), பெருமாள் (வயது 31) ஆகியோர் சிதம்பரத்தை கொலை செய்தனர்.

இந்த வழக்கில் மலேசிய நீதிமன்றம் மூவருக்கும் மரண தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பு கூறியது. இந்த தீர்ப்பை எதிர்த்து மூவரும் மேன்முறையீடு செய்யவுள்ளனர். (2)

# பூமியின் துருவங்களின் மாறுபாட்டால் ஆறு ஆண்டுக்கு ஒருமுறை நேரமாற்றம்

(லண்டன்)

பூமியின் துருவங்களில் ஏற்படும் மாறுபாட்டால் ஒரு நாளுக்கான நேரம் ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிகரித்து வருவதாக பிரிட்டன் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனின் லிவர்பூல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் பூமியின் துருவங்களில் ஏற்படும் நிகழ்வுகள் மற்றும் அதனால் ஏற்படும் மாற்றங்கள் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

1962 முதல் 2010 வரை ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில் பல புதிய தகவல்கள் வெளியாகி உள்ளன. அதன்படி ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியின் ஒரு நாளுக்கான நேரம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

பூமி அதன் சுற்றுப் பாதையில் சுற்றி வரும் போது தன்னைத் தானே சுற்றுவது வழக்கம். இவ்வாறு தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள தற்போது 24 மணி நேரம் ஆகிறது. இது, 3,000 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் 21 மணி நேரமாக இருந்தது. ஓராண்டுக்கு தற்போது 365 நாட்கள் இருக்கும் நிலையில் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் 450 நாட்களாக இருந்தது. இந்த மாற்றம் புவியின் துருவங்களிலும் மத்திய பகுதிகளிலும் ஏற்படும் மாற்றத்தால் ஏற்படுகிறது. இதன்படி ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியின் ஒரு நாளுக்கான நேரம் மெல்ல அதிகரித்து வந்துள்ளது. இந்த மாற்றம் தொடர்ந்து நடைபெற்று வருகிறத். இவ்வாறு, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூட்டமைப்பை உடைக்கும் திட்டம் உள்ளிருந்தே அமுலாகிறதா?

பத்மாசுரன் என்ற ஓர் அசுரன் சிவனை நோக்கி மகா தவம் இருந்தான். அவனின் தவ வலிமை கண்ட சிவன் அவன் முன்தோன்றி, பக்தனே! உன் பக்தியை மெச்சினேன் என்ன வரம் வேண்டும் கேள் என்றார்.

பத்மாசுரனோ சிவனைக் கண்டதும் சுவாமி, நான் யாருடைய தலையில் தொட்டாலும் அவர்கள் எரிந்து சாம்பலாக வேண்டும் என்று கேட்டான்.

பக்தா! நீ கேட்ட வரத்தை தந்தருளினோம் என்றார் சிவன். சிவன் தனக்குத் தந்த வரம் உண்மையானதா? என்ற சந்தேகம் ஏற்பட, சிவன் கொடுத்த வரத்தை அவர்மீதே பிரயோகிக்க பத்மாசுரன் முற்பட்டான்.

நிலைமையை உணர்ந்த சிவன் ஓட்டம் பிடித்தார். அசுரனோ சிவனைத் துரத்திக் கொண்டு ஓடுகின்றான்.

சிவனின் தலையில் அவன் கை வைத்து விட்டால், சிவனை அக்கினி எரித்துவிடும்.

தவ வலிமையின் பொருட்டு வரத்தைக் கொடுத்த சிவன் இப்போது பெரும் சிக்கலில் மாட்டுப்பட்டுவிட்டார்.

அசுரன் துரத்த, சிவன் ஓடுவதைக் கண்ட காத்தல் கடவுளாகிய கிருஷ்ணபரமாத்மா நிலைமையைச் சமாளிக்க திட்டம் போட்டார்.

மோகினி என்னும் அழகிய பெண் வடிவம் தாங்கி பத்மாசுரனுக்கு முன் தோன்றினார். அழகிய பெண்ணைத் கண்ட பத்மாசுரன் அவள் அழகில் மயங்கி தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்கின்றான். பத்மாசுரனின் கோரிக்கைக்கு சம்மதம் தெரிவித்த அந்தப் பெண்,

நான் உன்னைத் திருமணம் செய்வதாயிருந்தால், நீ நீராடி சிவ அனுட்டானம் செய்து வர வேண்டும் என நிபந்தனை விதித்தாள்.

அழகிய பெண்ணைத் திருமணம் செய்யும் ஆசையாலும் மோகத்தாலும் உடனடியாகவே ஆற்றில் இறங்கி நீராடிய அவன் சிவ அனுட்டானத்தின் ஒழுங்கு விதிப்பிரகாரம் திருநீற்றை தன் கையில் எடுத்து முதலில் தன் தலையில் வைத்தான். அவ்வளவுதான் சிவன் கொடுத்த வரத்தின் நியமப்படி தன் கையை தலையில் வைத்ததன் காரணமாக அந்த அசுரன் எரிந்து சாம்பலானான்.

இப்போது சிவன் தான் கொடுத்த வரத்திலிருந்து தப்பித்துக் கொண்டார்.

எதுவேண்டும் என்று நாம் அதீத அவாக் கொள்கிறோமோ அதுவே நம் அஸ்தமனத்திற்கு காலாகிவிடுவதும் உண்டு.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை வைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, வேட்பாளர் தெரிவு அடித்து நொருக்கி தகர்த்துவிடப்பார்த்தது.

நல்லகாலம் ஒரு மாதிரியாக இணக்கப்பாட்டிற்கு வந்ததன் காரணமாக கூட்டமைப்பு தப்பித்துக் கொண்டது.

ஆனாலும் கூட்டமைப்பில் இருந்து கொண்டு கூட்டமைப்புக்கு எதிராகச் செய்யப்படும் பிரசாரத்தைப் பார்க்கும் போது கூட்டமைப்பை உடைக்கும் திட்டத்தில் ஒப்பம் இடப்பட்டு விட்டது போல தெரிகின்றது; கவனம்.

# வடக்கு மாகாண மாணவர்களில் 15 பேருக்குப் புலமைப்பரிசில்

## ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் பதக்கம் வென்ற வடக்கு மாகாண மாணவர்களில் திறமையான மாணவர்கள் 15 பேர் புலமைப் பரிசில் மூலம் வெளிநாட்டுக்கு அனுப்பப்படவுள்ளனர் என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இம்மாணவர்களுடன் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் அழகியல் பாடங்களை கற்பிக்கின்ற ஒருசில ஆசிரியர்களும் பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாத இறுதிக்குள் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் வெளிநாட்டுக்கு புலமைப்பரிசில் மூலம் அனுப்பப்படுவர் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இம்மாணவர்கள் தேசிய மட்டத்தில் 36 பதக்கங்களைப் பெற்று வடக்கு மாகாணத்தின் புகழை உச்சிக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதேபோல் வடக்கு மாகாணம் முன்னிலை வகிக்க அடுத்த வருடத்துக்கான பல திட்டங்களை நாம் ஆரம்பிக்கவுள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் 500 இற்கும் மேற்பட்ட அழகியற்பாட ஆசிரியர்கள் உள்ளனர்.

இதனால் ஒரு பாடசாலைக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியர் பங்கீடு உள்ளது.

மாணவர்களை பிரதான பாடங்களை கற்கின்ற அதேவேளை இவ்வாறான அழகியல் பாடங்களைக் கற்றுக் கொள்வது அத்தியாவசியமானதும் இன்றியமையாததும் ஆகும்.

விளையாட்டுப்போட்டிகள் மற்றும் அழகியற் கலைப்போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலம் மாணவர்களுடைய பண்புகள் விருத்தியடைகின்றன.

ஏனைய மாணவர்களையும் இப்போட்டிகளுக்குள் ஈடுபடுவதற்கு சகமாணவர்களும் ஆசிரியர்களும் ஊக்கப்படுத்த வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் நடனம், இசை, சித்திரம் ஆகிய அழகியற்றுறைகளை மேம்படுத்துவதற்கு இங்குள்ள அழகியற் பாட ஆசிரியர்களை தெரிவு செய்து அவரவர் துறைகளில் பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பவுள்ளோம் என்றார். (அ-4)

# முறைப்பாட்டு பிரதிகளில் அதிக எழுத்துப் பிழைகள்

## மக்கள் விசனம்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள 3 பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளுக்குச் செல்லும் மக்களின் பெயர் விபரங்கள் பிழையாக எழுதுவதுடன் பெயரையும் மாற்றி எழுதுவதனால் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு வரும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டியிருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் மக்கள் முறைப்பாட்டாளர்கள் அல்லது எதிரியாக பொலிஸ் நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்கின்றனர்.

இதன்போது சில மக்களின் பெயர்கள் பிழையாக எழுதப்படுவதுடன் சில மக்களின் பெயர்கள் முற்றாக மாற்றப்பட்டும் எழுதப்படுகின்றது.

இதனால் நீதிமன்றத்திற்கு வழக்கு திகதிக்குச் செல்லும் மக்கள் தமது வழக்குகள் இடம்பெற்ற போதிலும் பெயர்கள் மாறி இருப்பதனால் அதனை அறியாது நீண்டநேரம் நீதிமன்றத்தில் காத்திருந்துவிட்டுச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

அத்துடன் பொலிஸார் சந்தேக நபர்கள் வழக்குகளுக்கு சமுகம் அளிக்கவில்லை எனக் கூறி உரியவர்களைக் கைதும் செய்கின்றனர். இந்நிலையில் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர் என சுட்டிக் காட்டப்படுகின்றது. (அ-ம-24)

## புத்தூர் தகவல்களுக்கு புதிய இணையத்தளம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சம்மந்தமான சகல தகவல்களுடனும் புதிய இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக நிலப்பயன்பாட்டு திட்ட உதவி உத்தியோகத்தர் எஸ். ரி. விமலன் தெரிவித்துள்ளார்.

இவ் இணையத்தளம் புத்தூர் வடக்கு, புத்தூர் கிழக்கு, புத்தூர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளதோடு பிரதேசத்தில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புக்கள், பொது நிறுவனங்கள் உள்ளிட்ட தகவல்களை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

- மேற்படி இணையத்தளத்தை www.newputhuvai.com என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரிவுகளுக்குட்பட்ட உருளைக் கிழங்கு உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சங்க விசேட பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக கோப்பாய் உருளைக் கிழங்கு உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் இ. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள, கமநல அபிவிருத்தித்திணைக்கள, விவ்சாயத்திணைக்கள உயர் அதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர்.

எனவே இவ்விசேட கூட்டத்தில் யாழ் மாவட்ட அனைத்து உருளைக்கிழங்கு செய்கையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது. (செ-5)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### நந்தி ஏன் இறைவனை தாங்குகிறது?

இளமை,செல்வம்,சுகபோகங்கள் யாவும் நிலையற்றவை. நாம் செய்த நற்செயல்களின் பலன் மட்டுமே நம்முடன் வரும். ஒருவனுக்கு தர்மமே உற்ற துணை என்பதை மணிமேகலை காப்பியம் **அறமே மிக்க வழித்துணையாவது** என சிறப்பித்துக்கூறுகிறது. திருவள்ளுவரும் **அறத்தால் வருவதே இன்பம்** என்றும் உண்மையான இன்பம் தர்மத்திலேயே உண்டாகும் என்றும் குறிப்பிடுகிறார். ஆகவே வாழ்நாளை வீணாகக் கழிக்காமல் தர்மம் செய்து பயனுள்ளதாக கழிக்கவேண்டும். சிவபெருமானை தாங்கும் நந்தி தேவர் தர்மத்தின் அம்சம் என்பதால் அதற்கு **அறவிடை** என்றும் பொரு ளுண்டு. விடை என்றால் காளை ஆக கடவுளையே தாங்கும் பேறு தர்மத்தி ற்கு மட்டுமே உண்டு. ஒருவன் தர்மத்தைக் காப்பானேயானால் தர்மம் அவனைக் காக்கும். இதனை **தர்மோ ரஷதி; தர்மம் ரஷித** என்பார்கள். இதிலிருந்து தர்மத்தை பாதுகாப்பவர்கள் தன்னையே காத்தவர்களாகிறார்கள்.

## சத்திய தரிசனம்



ஆத்மாவைப் பற்றி ஒருவர் அறிந்துகொண்ட கணத்திலேயே துயரத்தில் பட்ட தளையிலிருந்து ஒருவர் விடுபடுகிறார்.லௌகீக உலகம் மதிப்பு வாய்ந்தது என்பதனை மறந்துவிடுங்கள். என்றைக்கு ஆன்மீகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் உயர்ந்த பண்புகளை வளர்த்துக் கொள்கிறார்களோ அன்றைக்கு ஆன்மீக்தை நம்பாதவர்கள் மறைந்து விடுவார்கள்.

அனைத்துக்கும் மேலாக மற்றவர்களைத் தாக்கி காயப்படுத்தி, இழிவு படுத்தும் தீய விருப்பத்தினை மனதிலிருந்து வேருடன் பிடுங்கி எறிந்திட வேண்டும். கருணையில் (காருண்யம்) ஊறிய மனங்களில் மட்டுமே பக்தி மற்றும் அர்ப்பணிப்பு எனும் இளம் கன்றுகள் வளர்ந்திட இயலும். மிகச்சிறந்த விதைகளும் கூட உப்பு கலந்த மண்ணில் எங்ஙனம் முளைத்திடும்? காருண்யம் என்பது நமது மனங்களில் மற்றவர்களுடைய மகிழ்ச்சி மற்றும் துயரங்களைப் பிரதிபலிப்பதும் இரக்கம் மற்றும் கருணையுடன் விடையளித்தலும் ஆகும். இது நடந்திட மனமானது தூய்மைப்படுத்தப்பட்டு மிகச்சிறந்த கண்ணாடியைப் போன்று மாற்றம் அடைந்திடச் செய்தல் வேண்டும்.

## உரும்பிராயில் விபத்து; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வான் மற்றும் மோட்டார்சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் நபர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் உரும்பிராய்ச் சந்திக்கு அருகாமையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மோட்டார்வண்டியில் பயணம் செய்த ஈழவேந்தன் (வயது 40) என்பவரே படுகாயமடைந்துள்ளவராவார்.

மோட்டார் வண்டி முற்றாக சேதமுற்றதோடு வானும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்தியத் தீவுகள் வாகை

மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்குமிடையிலான 2ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 37 ஓட்டங்களால் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றுள்ளது.

கயானாவில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது ஓவரிலேயே கிறிஸ்கெயிலை இழந்த மேற்கிந்திய தீவுக்ள் அணி, அதன் பின்னர் 2ஆவது விக்கெட்டுக்காக 79 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தது.

ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களுடன் தடுமாறியபோதிலும், அதன் பின்னர் 6ஆவது விக்கெட்டுக்காக 70 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக டெரன் பிராவோ 81 பந்துகளில் 54 ஓட்டங்களையும் டுவைன் பிராவோ 52 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் ஜோன்சன் சார்ள்ஸ் 51 பந்துகளில் 31 ஓட்டங்களையும் கெரான் பொலார்ட் 27 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக ஷகிட் அப்ரிடி 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சயீட் அஜ்மல் 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அசாத் அலி, மொஹமட் இர்பான் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

232 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 37 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 2 விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களுடன் காணப்பட்டபோதிலும், அதன் பின்னர் விக்கெட்டுக்களை தொடர்ச்சியாக இழந்து தடுமாறியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக நசீர் ஜம்ஷெத் 93 பந்துகளில் 54 ஓட்டங்களையும் உமர் அக்மல் 46 பந்துகளில் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக சுனில் நரைன் 26 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் டுவைன் பிராவோ 2 விக்கெட்டுக்களையும் கேமர் றோச், டெரன் சமி, மார்லன் சாமுவேல்ஸ், கெரான் பொலார்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.




இப்போட்டியின் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சுனில் நரைன் தெரிவானார்.

இப்போட்டியின் முடிவையடுத்து, 2 போட்டிகளின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டியில் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெண்கள் யூரோ காற்பந்து தொடரின் காலிறுதிக்கு பிரான்ஸ் தகுதி



பெண்கள் "யூரோ" கிண்ணக் காற்பந்து தொடரின் காலிறுதிக்கு பிரான்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது. சுவீடனில் 11ஆவது யூரோ கிண்ணக் காற்பந்து (பெண்கள்) தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட 12 அணிகள், மூன்று பிரிவுகளாக லீக் சுற்றில் பங்கேற்கின்றன. 'சி' பிரிவு லீக் போட்டியில் ஸ்பெயின், பிரான்ஸ் அணிகள் மோதின.

பிரான்ஸ் அணிக்கு, போட்டியின் 5ஆவது நிமிடத்தில் ரினார்டு ஒரு கோல் அடித்தார். இதற்கு ஸ்பெயின் அணியால், பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில், பிரான்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இரண்டு லீக் போட்டியிலும் வென்ற பிரான்ஸ், 6 புள்ளிகளுடன் முதல் அணியாக காலிறுதிக்கு தகுதி பெற்றது.

**இங்கிலாந்து 'சமநிலை'**

'சி' பிரிவில் நடந்த மற்றொரு லீக் போட்டியில், இங்கிலாந்து, ரஷ்ய அணிகள் மோதின. முதல் பாதியில் ரஷ்யாவின் கோரோவ்கினா (38) ஒருகோல் அடித்தார். இரண்டாவது பாதியில் இங்கிலாந்து அணியின் டியூகான் 'ஸ்டாப்பேஜ்" நேரத்தில் ஒரு கோல் அடிக்க, போட்டி, 1-1 என்ற கோல் கணக்கில் 'சமநிலை' ஆனது.

## ஸ்ரீலங்கா பிறிமியர் போட்டிகள் இரத்து?

SRI LANKA PREMIER LEAGUE

இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும், சமர்செட் நிறுவனத்திற்கும் செலுத்த வேண்டிய வருடாந்தப் பணத்தை ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரின் அணிகள் செலுத்தத் தவறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எத்தனை அணிகள் இதுவரை தங்களது பணத்தைச் செலுத்தவில்லை என்பது குறித்து இலங்கைக் கிரிக்கெட் சபையோ அல்லது ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்கின் சந்தைப்படுத்தல் பங்காளர்களான சமர்செட் நிறுவனமோ இதுவரை தெளிவுபடுத்தவில்லை.

இவ்வருடத்திற்கான அணிகளைத் தெரிவதற்கான வீரர் தெரிவு கடந்த 14ஆம் திகதி இடம்பெறவிருந்த போதிலும், அது பின்னர் 20ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

எனினும், வருடாந்தப் பணத்தைச் செலுத்தாதவரை அணிகள் வீரர்கள் தெரிவில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை இலங்கைக் கிரிக்கெட் சபையும், சமர்செட் நிறுவனமும் தெளிவுபடுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அணிகள் தங்களது வருடாந்தப் பணத்தை செலுததாததன் காரணமாக இம்முறை ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடர் இடம்பெறாது என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சேவாக், கம்பீருக்கு மீண்டும் அணியில் வாய்ப்புண்டு

## முன்னாள் தெரிவுக்குழு தலைவர் கிரண் மோரே



ஷேவாக், கம்பீர் போன்ற மூத்த வீரர்கள் மீண்டும் இந்திய அணியில் இடம் பெற வாய்ப்பு உள்ளது என்று முன்னாள் தெரிவுக்குழு தலைவர் கிரண்மோரே தெரிவித்தார்.

இந்திய அணியில் இருந்து ஷேவாக், கம்பீர், யுவராஜ் சிங் உள்ளிட்டோர் மோசமான பார்ம் காரணமாக நீக்கப்பட்டனர்.

இவர்களுக்கு பதிலாக தெரிவு செய்யப்பட்ட ஷிகர் தவான், ரோகித் சர்மா உள்ளிட்ட இளம் வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இதனால் மூத்த வீரர்கள் மீண்டும் அணியில் இடம்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து முன்னாள் தெரிவுக்குழு தலைவர் கிரண் மோரே கூறுகையில், இந்திய அணியில் இடம்பிடிக்க கடுமையான போட்டி நிலவுகிறது. இது, ஆரோக்கியமான ஒன்று.

இதன்மூலம் திறமையான வீரர்கள் மட்டுமே அணியில் தங்களது இடத்தை தக்கவைத்துக் கொள்ளமுடியும். அதேவேளையில், முக்கியமான தொடர்களுக்கு சில மூத்த வீரர்களை தெரிவு செய்ய வேண்டும். ஏனெனில் சில போட்டிகளில் வீரர்களின் அனுபவம் முக்கிய பங்குவகிக்கும்.

ஷேவாக், கம்பீர், யுவராஜ், சகிர்கான் போன்ற மூத்த வீரர்கள் மோசமான பார்ம், உடற்தகுதி, காயம் உள்ளிட்ட காரணங்களுக்காக அணியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இவர்கள், உள்ளூர் தொடரில் திறமையை வெளிப்படுத்தும் பட்சத்தில், மீண்டும் தேசிய அணியில் இடம்பிடிக்க வாய்ப்பு உள்ளது. இவர்களது கிரிக்கெட் வாழ்க்கை முற்று பெறவில்லை.

தற்போதுள்ள இந்திய அணியில் ஷிகர் தவான், ரோகித் சர்மா ஜோடி தொடக்கத்தில் அசத்துகிறது.

இவர்களுக்கு அடுத்தடுத்து வாய்ப்பு கொடுப்பதன் மூலம், சிறந்த கூட்டணியை உருவாக்க முடிகிறது என்றும் ஒருவேளை, இவர்கள் காயம், பார்ம் உள்ளிட்ட பிரச்சினைகளில் சிக்கிகொள்ளும்போது, ஷேவாக அல்லது கம்பீருக்கு மீண்டும் வாய்ப்பு கொடுக்கலாம் எனவும் கூறியுள்ளார்.

## 'டி.ஆர்.எஸ்.' முறை சர்ச்சையில்

நடுவர்கள் முடிவை தொழில்நுட்பம் மூலம் மறுபரிசீலனை செய்யும் (டி.ஆர்.எஸ்.,) முறை விரைவில் நிறுத்தப்படலாம் என, முன்னாள் சர்வதேச நடுவர் பொமி ஜமுலா தெரிவித்தார்.

டி.ஆர்.எஸ். முறைக்கு, ஆரம்பத்தில் இருந்தே இந்தியா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்திய அணி பங்கேற்கும் போட்டிகளில இம்முறை பயன்படுத்தப்படுவதில்லை. சமீபத்தில் முடிந்த ஆஷஸ் தொடர் முதல் டெஸ்டில. களத்தில் இருந்த நடுவர்கள் வழங்கிய 13 முடிவுகளில், 8 தீர்ப்புகள் மூன்றாவது நடுவரால் மாற்றப்பட்டது. இதனால், "டி.ஆர்.எஸ்.,' சர்ச்சையை கிளப்பியுள்ளது. இந்தியாவின் முன்னாள் (1990-1999) நடுவர் பொமி ஜமுலா, கூறுகையில்,

தொழில்நுட்ப அடிப்படையில் செயற்படும் டி.ஆர்.எஸ்., முறை, பல்வேறு நேரங்களில் சிறப்பாக இருந்தது. ஆனால், அவ்வப்போது தவறுதலான தீர்ப்பும் தருகிறது. இன்னும் சில டெஸ்ட் போட்டிகளில் பார்க்கலாம். தொடர்ந்து தவறுகள் நேரும் பட்சத்தில், டி.ஆர்.எஸ்., முறையை இல்லாமல் செய்யவேண்டும். அதேநேரம், தொழில்நுட்பங்கள் நடுவர்களுக்கு உதவியாகவும் அமையும். இதை பயன்படுத்தும்போது தான், மொழி காரணமாக சரியாக புரிந்து கொள்ளமுடியாமல் போகிறது. இவர்களுக்கு சிறப்பாக பயிற்சி கொடுக்கவேண்டும் இவ்வாறு ஜமுலா கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணம்
# விக்டோரி அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

பாலாகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணத்துக்காக மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் முதலாவது ஆண்டாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 20-வது தகுதிகாண் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்து க்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் விக்டோரி அணி, யாழ் ஜொனியன்ஸ் அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 160 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக கபில்ராஜ் 18, ரட்ணம் 24, லபேந்திரா, அகிலன் ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 38, 67 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் விக்டோரி அணி சார்பாக நகுலன், தனுஜன் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்டோரி அணி 16.4 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகளால் வெற்றிபெற்றது.


அவ்வணி சார்பில் துடுப்பாட்டத்தில் சசி 27, கணேஸ் 63, கஜீந்திரன் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களை எடுத்தனர்.

இப்போட்டியின் மூலம் சிறந்த கழக அணி தெரிவிற்கு விக்டோரி அணிக்கு 4.9 புள்ளிகளும் யாழ் ஜொனியன்ஸ் அணிக்கு 2 புள்ளிகளும் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தந்தையானார் ஸ்மித்

(கேப்டவுண்)

தென் ஆபிரிக்க அணியின் அணித்தலைவர் கிரீம் ஸ்மித் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.



தென் ஆபிரிக்க டெஸ்ட் கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் கிரீம் ஸ்மித் 2011 ஆகஸ்ட்டில் அயர்லாந்து பாடகி மார்கன் டினேவை மணமுடித்தார். கடந்த ஆண்டு இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் டினேவுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. மனைவி மற்றும் புதிதாக பிறந்த குழந்தை அடங்கிய போட்டோவை தனது டுவிட்டர் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

இதில் நானும் என் மனைவியும் புதிதாக வந்துள்ள மகனை பூமிக்கு வரவேற்கின்றோம். நான் மகிழ்ச்சியில் உள்ளேன். என் மனைவி மீது அன்பும் மரியாதையும் அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# ஓல்ட் கோல்ஸ் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணத்திற்காக மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகம் முதலாவது ஆண்டாக நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 21வது தகுதிகாண் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்தது.

இப்போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி, ஜொலி ஸ்ரார் அணியை 7 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலி ஸ்ரார் அணி 20 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டதில் அவ்வணி சார்பாக மதூசன் 32, மணி 77, சைலேஸ் ஆட்டம் இழக்காமல் 44 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்து வீச்சில் ஓல்ட் கோல்ஸ் அணி சார்பாக திலீபன், சோபி ஆகியோர் தலா ஒரு இலக்கினையும், பிரசாத் 2 இலக்கினையும் கைப்பற்றினார்.

192 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் அணி 19.2 ஓவர்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 193 ஓட்டங்களை பெற்று 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் அவ் அணி சார்பாக திலீபன் 64, நிரோசன் 43, குகன் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலி ஸ்ரார் அணி சார்பாக உமாதரன், முரளி, தீபன் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

ஓல்ட் கோல்ஸ் அணி இவ்வெற்றியின் மூலம் டி பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று காலிறுதி போட்டிக்கு தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியின் மூலம் சிறந்த கழக அணித் தெரிவிற்கு ஓல்ட் கோல்ஸ் 5.3 புள்ளிகளையும், ஜொலி ஸ்ரார் அணி 2.2 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன.

# பாம்புக் கடிக்கு குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

பாம்புக் கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலப் பகுதியைச சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கனகசபை தவராசா (வயது 42) என்பவரே உயிரிழந்தவராவார். மேற்படி பகுதியில் உள்ள வளவினுள் கடந்த திங்கட்கிழமை இரவு பசு மாட்டினை அவிழ்க்கச் சென்ற போது பிரஸ்தாப குடும்பஸ்தரை பாம்பு தீண்டியது.

பாம்பினால் கடியுண்ட குடும்பஸ்தர் சிகிச்சைக்காக முல்லைத்தீவு ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின் நேற்றைய தினம் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சடலமானது வவுனியா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேதப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-11)

# மத்தியூஸுக்கு டும், டும், டும்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர் ஏஞ்சலோ மத்யூஸ் இன்றைய தினம் திருமண பந்தத்தில் இணையவுள்ளார்.




அவரது திருமண வைபவம் கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெறவுள்ளது.

திருமண வைபவத்தில் மணமகன் மற்றும் மணமகளின் உறவினர்களும், இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

மத்யூஸ் மணமுடிக்கவிருக்கும், பெண் கிரிக்கெட் துறையுடன் சம்பந்தப்பட்டவர் என்று தெரியவந்துள்ளது.

# ராஜபக்ஷ...

...தும் தேவையில்லாத அபிவிருத்திகளை மேற்கொண்டு நாட்டின் அபிவிருத்திகளை சீரழிக்கின்றது.

பொதுநலவாய மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள நிலையிலேயே அபிவிருத்தி என்றபெயரில் நாடகமாடுகின்றது.

உள்நாட்டு வருமானம் என்றுமில்லாத அளவிற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அனைத்துவித நடவடிக்கைகளும் செயலிழந்துள்ளன.

தென்பகுதி சிங்கள பௌத்த மக்களை முட்டாள்களாக்கி தேர்தலில் வெற்றிபெற்ற அரசாங்கம் மாகாண சபை முறைமையையும் இல்லாதொழிக்க திட்டம் தீட்டியது.

இந்நிலையில் கடும்போக்கு ஆட்சிபுரியும் ராஜபக்ஷ ரெஜிமென்டை வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கி வந்துவிட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# வவுனியா...

கஜபா றெஜிமென்டைச் சேர்ந்த தென்னகோன் (வயது - 25) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

வபத்தில் காயமடைந்த நான்கு இராணுவ வீரர்களும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்துத் தொடர்பாக நவகமுவ பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(செ-250, 266)

# சமாதான முனை...

பெற்ற நீண்ட கால யுத்தம் முடிபுக்கு கொண்டுவரப்பட்டு நான்கு வருடங்களைக் கடந்து விட்டது.

ஆனால் இனங்களுக்கிடையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைககள் திருப்திகரமாகவோ அல்லது போதுமானதாகவோ இல்லை.

இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் மதீப்பீடு செய்து வருகின்றது என அதன் விசேட பிரதிநிதி என்னுடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.

மேலும் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் தமிழ் மக்களுக்கு நன்மையானதா எனவும் சிறுபான்மை -பெரும்பான்மை இனங்களுக்கிடையிலான தொடர்புகள் குறித்தும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக் குறித்தும் தன்னிடம் கேள்வியெழுப்பியதாகவும் ஆயர் தெரிவித்தார்.

இதுதவிர இராணுவ நெருக்கடிகள் உள்ளதா என்பது குறித்தும் அதிக கவனம் செலுத்தியதாகவும் இது தொடர்பாகவே தன்னிடம் அதிக கேள்விகள் எழுப்பியதாகவும் ஆயர் தெரிவித்தார்.

அத்தோடு ஆஸ்திரிய நாட்டின் பிரதிநிதி எழுப்பிய கேள்விகளுக்கு உரிய பதில்களைத் தான் வழங்கியதாகவும் குறிப்பாக இராணுவ நெருக்கடிகள் தொடர்பாக கேட்டபோது, இராணுவத்தினரால் கைது நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் தான் கூறியதாக ஆயர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# வீரவன்சவிற்கு சுரணை...

என்ன செய்வாராம் இவர்? கடலில் குதிக்க போகிறாரா?

இவரும், இவரை போன்ற இன்னொரு கோமாளியான சம்பிக்க ரணவக்கவும் ஒன்றில் அரசில் இருந்து வெளியேற வேண்டும். அல்லது வாய்களை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் சிங்கள மொழியில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

ஓய்வு பெற்ற நீதிபதி விக்னேஸ்வரனை வடக்கின் முதல்வர் வேட்பாளராக கூட்டமைப்பு அறிவித்தவுடன் சம்பிக்க ரணவக்கவுக்கு காய்ச்சல் வந்துவிட்டது. விக்னேஸ்வரனை பாலசிங்கத்துடன் ஒப்பிட்டு பேசியுள்ளார். தயா மாஸ்டரை அவரது மகிந்த அரசாங்கம வேட்பாளராக அறிவித்துள்ளது மறந்து விட்டது.

விக்னேஸ்வரனை வடக்கின் முதல்வர் வேட்பாளராக அறிவித்ததன் மூலம் சம்பந்தன் சிங்கள மக்களுக்கு ஒரு நல்லெண்ண செய்தியை அனுப்பியுள்ளார். இதுதான் கடைசிச் செய்தி என நான் எண்ணுகின்றேன். இலங்கை நாட்டின் நீதிதுறையில் உயர் பதவி வகித்த ஒருவரை நியமித்ததன் மூலம் ஒன்றுபட்ட நாட்டுக்குள் அரசியல் அதிகாரங்களை பகிர்ந்து கொண்டு வாழ தயார் என சம்பந்தன் அறிவித்துள்ளார்.

இதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை சிங்கள மக்களும், அரசாங்கமும், சிங்கள அரசியல் கட்சிகளும் பயன்படுத்த வேண்டும்.

ஆனால், இதையும் இனவாத கண்ணோட்டத்தில் பார்த்து சம்பிக்க ரணவக்க, பாலசிங்கத்துடன் விக்னேஸ்வரனை ஏன் ஒப்பிடுகிறார் என்பதையும், ஒப்பிட்டு சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டிவிட முயல்கிறார் என்பதையும் எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இவரது கருத்தை சிங்கள மக்கள் ஏற்றுகொண்டால், சிங்கள மக்களுடன் தமிழர் ஒரே நாட்டில் வாழ முடியாது என்ற அர்த்தம் உருவாகிவிடும் என எச்சரித்து வைக்க விரும்புகின்றேன்.

மாகாணசபை தேர்தலில் நாம் சில வேளை /வெவ்வேறு சின்னங்களில் போட்டியிடலாம். ஆனால், எங்கே இருந்தாலும் நாம் இந்த அரசாங்கத்தை எதிர்க்கும் அணியில்தான் இருப்போம். அதுதான் அடிப்படை. வடக்கிலும், மத்திய மலைநாட்டிலும், வயம்ப மாகாணத்திலும் நாம் இதைதான் செய்வோம். இந்த தேர்தல் இனவாத மகிந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் இயக்கத்தை ஆரம்பிக்கும் தேர்தல்.

இவ்வாறு மனோ கணேசன் தனதுரையில் தெரிவித்தார். (தெ -11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 20-07-2013 | 22-07-2013 | 27-07-2013 | 29-07-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

(சி/4029) BCHS

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

# பொருளியல்
## A/L 2013
### இறுதிக் கருத்தரங்கு

(வன்னி மாணவர்களின் நன்மை கருதி)
காலம் : 22.07.2013 திங்கள் காலை 8 மணி
இடம் : நாவலர் கல்வி நிலையம்
(கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக)
வளவாளர் : M.C.சுதாகரன்
(பிரபல பொருளியல் ஆசிரியர்)

- ✔ மாதிரி வினாத்தாள்கள் (08)
- ✔ எதிர்பார்ப்பு வினாக்கள்
- ✔ இலங்கைப் பொருளாதாரம் (அண்மைய விடயங்களுடன்)

(3380)

# வாடகைக்கு

பலாலி வீதி, உரும்பிராயில்
நல்ல நிலையில்
இயங்கிக்கொண்டிருக்கும்
உணவகம் ஒன்று
வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
0776170464
(சி-4031)

# அரசு அட...

கப்படுகின்றன. இதற்கேற்ப அரசாங்கமும் செயற்படுகிறது.

புதுடில்லிக்கான பசில் ராஜபக்ஷவின் விஜயம் மற்றும் சிவ்சங்கர் மேனனின் கொழும்பு விஜயங்களை அடுத்து, 13வது திருத்தச் சட்டமூலத்தில் மாற்றம் செய்யும் விவகாரத்தில் அரசாங்கம் தீவிர நிலையைக் குறைத்துவிட்டது.

இது தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்ட போது இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று கூறப்பட்டது.

ஆனால் இப்போது 6 மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

வடமாகாண சபைத் தேர்தல் மற்றும் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாடு ஆகியவை முடிபடைந்த பின்னர் தான் இந்த அறிக்கை வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

# காணி விற்பனைக்கு

கோப்பாய் முருகன் கோவில் பிரதான வீதிக்கு சமீபமாக
வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
(3386)
உடன் தொடர்புகளுக்கு 0776758131, 0776740836

# VACANCY

எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தரத் தொழில் சர்வதேச முன்னணி நிறுவனத்தில் New Office 4 இற்கு 18 வயதுக்கு மேற்பட்ட O/L தோற்றிய இளைஞர்கள் 30 பேர் வீதம் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

பயிற்சி, தங்குமிட வசதிகள், உணவு இலவசம்.
பயிற்சியின் போது 18,000/- பின் 35,000/-+.

(3397)
உடன் அழைக்கவும்
0777981471, 0775566224, 021720867

# கண்ணீர் அஞ்சலி



திரு.Pat மோகனின் (Principal of Croydon Metro Politon College, UK and Chairman of british College of business studies, colombo, Srilanka) அன்பு மாமியார்

## திருமதி லக்ஷ்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம்

அவர்கள் 17.07.2013 அன்று இறைவனடி சேர்ந்த செய்தியைக் கேட்டு கலங்கி நிற்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி/4034)

தகவல்: British College of business Studies
320, R.A.De.Mel, Mawatha, Colombo -03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.